# தெல்லிப்பழைச் சைவாலயங்கள்



சி. அப்புத்துரை

இளையதம்பி சுப்பிரமணியம்
நினைவு வெளியீடு

உ

சிவமயம்

# தெல்லிப்பளைச் சைவாலயங்கள்

சி. அப்புத்துரை


தெல்லிப்பளை

இளையதம்பி சுப்பிரமணியம் தம்பதியர்

நினைவு வெளியீடு

1988 – 10 – 06

# தெல்லிப்பழைச் சைவ ஆலயங்கள்



# தெல்லிப்பளைச் சைவாலயங்கள்

| படத்தின்படி இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயம் ... ... ... ... ... | 1 |
| 2. | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ... ... ... ... ... | 7 |
| 3. | தோதரையம்மன் ஆலயம் ... ... ... ... ... ... | 10 |
| 4. | யூனியன் கல்லூரி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் | 11 |
| 5. | தம்பையப்புலம் முத்துமாரியம்பாள் ஆலயம் ... ... | 12 |
| 6. | தெல்லிப்பளை கிழக்கு காளியம்பாள் ஆலயம் ... ... | 13 |
| 7. | நாச்சிமார் ஆலயம் ... ... ... ... ... ... ... ... | 14 |
| 8. | கோயிற்புலம் பேச்சியம்பாள் ஆலயம் ... ... ... | 15 |
| 9, | சித்தியம்புளியடி பேய்ச்சியம்பாள் ஆலயம் ... ... ... | 12 |
| 10. | கிளானை கண்ணகையம்பாள் ஆலயம் ... ... ... ... | 15 |
| 11. | பற்றையம்மன் ஆலயம் ... ... ... ... ... ... ... | 16 |
| 12. | கொல்லன்சீமா காளியம்பாள் ஆலயம் ... ... ... | 17 |
| 13. | சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராசர் ஆலயம் | 17 |
| 14. | கருணைமிகு காசிவிநாயகர் ஆலயம் ... ... ... ... | 24 |
| 15. | குருக்கள்கிணற்றடி விநாயகர் ஆலயம் ... ... ... ... | 22 |
| 16. | கன்னிவளவு பிள்ளையார் ஆலயம் ... ... ... ... ... | 18 |
| 17. | அரசனுலடி விநாயகர் ஆலயம் ... ... ... ... ... | 20 |
| 18. | தரைமன்கலட்டி விநாயகர் ஆலயம் ... ... ... ... | 21 |
| 19. | தில்லையிட்டி விநாயகர் ஆலயம் ... ... ... ... ... | 19 |
| 20. | முல்லாத்தனை சித்திவிநாயகர் ஆலயம் ... ... ... ... | 26 |
| 21. | வீமன்காமம் சித்திவிநாயகர் ஆலயம் ... ... ... ... | 20 |
| 22. | குருநாதசுவாமி ஆலயம் ... ... ... ... ... ... ... | 27 |
| 23. | அரசினர் மாவட்ட வைத்தியசாலை முருகன் ஆலயம் ... | 26 |
| 24. | கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் ஆலயம் ... | 29 |
| 25. | பெரியகலட்டி ஞானவைரவர் ஆலயம் ... ... ... | 28 |
| 26. | குடவத்தை அம்பனை ஞானவைரவர் ஆலயம் ... ... | 30 |
| 27. | செஞ்சலனை ஞானவைரவர் ஆலயம் ... ... ... ... | 32 |
| 28. | சூலாம்பத்தை வயிரவர் ஆலயம் ... ... ... ... ... | 30 |
| 29. | வயலிருப்பைப்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் ... ... | 31 |
| 30. | புதுத்தோட்ட ஆதிவைரவர் ஆலயம் ... ... ... ... | 33 |
| 31. | மகாதனை நரசிங்கவைரவர் ஆலயம் ... ... ... ... | 39 |
| 32. | தேரம்பல வயிரவர் ஆலயம் ... ... ... ... ... ... | 35 |
| 33. | முருங்காவத்தை வயிரவர் ஆலயம் ... ... ... ... | 35 |

| படத்தின்படி இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 34. | இம்பிளிசிட்டி வைரவர் ஆலயம் ... ... ... ... ... | 33 |
| 35. | நல்லை நயினார் கிணற்றடி நரசிங்கவைரவர் ஆலயம் ... | 32 |
| 36: | தம்போதனை ஞானவைரவர் ஆலயம் ... ... ... ... | 34 |
| 37. | சித்தியம்புளியடி சுடலைவைரவர் ஆலயம் ... ... ... | 37 |
| 38. | கல்வளவு ஸ்ரீ வைரவர் ஆலயம் ... ... ... ... ... | 37 |
| 39. | புளியடி வைரவர் ஆலயம் ... ... ... ... ... ... | 36 |
| 40. | வண்ணமாதரை ஞானவைரவர் ஆலயம் ... ... ... | 38 |
| 41. | கொத்தியாலடி சுடலை வயிரவர் ஆலயம் ... ... ... | 38 |
| 42, | கிளானை ஞானவைரவர் ஆலயம் ... ... ... ... ... | 36 |
| 43. | வேள்வை சூலாம்பத்தை வைரவர் ஆலயம் ... ... | 40 |
| 44. | கேணியடி வயிரவர் ஆலயம் ... ... ... ... ... ... | 41 |
| 45. | பனையில் வயிரவர் ஆலயம் ... ... ... ... ... ... | 40 |
| 46. | புத்திரங்கொண்டான் ஞானவைரவர் ஆலயம் ... ... | 39 |
| 47. | முல்லார்த்தனை வீரபத்திரர் ஆலயம் ... ... ... ... | 41 |
| 48. | சித்தியப்புளியடி கட்டுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயம் | 42 |
| 49. | முடிமன்னர் இராஜ ஆலயம் ... ... ... ... ... ... | 42 |
| 50. | சுளுவில் பெரியதம்பிரான் ஆலயம் ... ... ... ... ... | 43 |
| 51. | கோயிற்புலம் அண்ணமார் சிவன் ஆலயம் ... ... ... | 44 |
| 52. | சித்தியம்புளியடி அண்ணமார் ஆலயம் ... ... ... ... | 43 |
| 53. | கோவங்கட்டுவளை அண்ணமார் ஆலயம் ... ... ... | 45 |

# சமர்ப்பணம்





அமரர்
இளையதம்பி சுப்பிரமணியம்

தோற்றம்: 1909 – 06 – 23
மறைவு : 1988 – 09 – 06

அமரர்
சுப்பிரமணியம் சிவஞானம்

தோற்றம்: 1912 – 08 – 20
மறைவு : 1974 – 12 – 22

தெல்லிநகரில் சீர்பெற வாழ்ந்து
விபவ ஆவணி அபரபக்கத்து
ஏகாதசியில் இறைபதம் எய்திய (1988-09-06)
இளையதம்பி சுப்பிரமணியம் எனும்
எங்கள் தந்தையின் இனியநினைவும்

ஆனந்த மார்கழிப் பூர்வபக்கத்து
அட்டமித்திதியில் அரனடிசேர்ந்த (1974-12-22)
எம்உயிர்அன்னை சிவஞானம் நினைவும்

பிங்கள சித்திரைப் பூர்வபக்கத்து
அட்டமித்திதியில் அமரன் ஆன (1977-04-26)
அன்னவர் பேரன் தனஞ்ஜயன் நினைவும்
இந்நிலவுலகில் என்றும் நிலைத்திட
இந்நூல் அவர்க்கே சமர்ப்பணமாகும்.

''சிவஞான வாசம்'',
புகையிரத நிலைய வீதி,
தெல்லிப்பளை,
1988-10-06.

அன்புடன்,
திருமதி லலிதாதேவி வேலாயுதபிள்ளை
திரு. சுப்பிரமணியம் விஜயசேகரன்
திரு. சுப்பிரமணியம் விஜயராகவன்

உ

சிவமயம்



**தெல்லிப்பழை**

**சின்னத்தம்பி இளையதம்பி சுப்பிரமணியம்**

உ
சிவமயம்

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
## பரிபாலன சபை முதல்வர்
# சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
# வழங்கிய வாழ்த்துரை

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடுமின் தேடிச் சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொண்மினே"

திருக்கோயில்களாற் சிறப்புப் பெற்றது நம்நாடு. ஊர்கள்தோறும், கிராமங்கள்தோறும் அமைந்து விளங்கும் சைவ ஆலயங்களின் வரலாறுகள் அடங்கிய விபரத்திரட்டொன்றை வெளியிடுவது வரவேற்கத் தக்க ஒரு நன்முயற்சியாகும். இந்த அடிப்படையில், தெல்லிப்பளையில் அமைந்துள்ள திருக்கோயில்களின் விபரத்திரட்டொன்று மிகவும் சிறந்த முறையில் வெளிவருவது வரவேற்கத்தக்கது. அமரர்களான திரு. இளையதம்பி சுப்பிரமணியம் தம்பதியர் நினைவாக அவர்களின் பிள்ளைகளின் ஆதரவில் இம்முயற்சி கைகூடியுளது.

மருமகன் க. க. வேலாயுதபிள்ளை அவர்களின் ஊக்குவிப்பும், இளவாலை செல்லத்துரை நாவரசன் அவர்கள் உடலுழைப்பும், பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் அயரா முயற்சியும் இப்பணிக்கு மேலும் உதவியாக இருந்தமை பாராட்டிற்குரியன. எதிர்காலத்தில் இவ்வழியைப் பின்பற்றி நினைவு தினங்களும் அஞ்சலி நிகழ்வுகளும் நிலையான பயனுள்ளவையாக அமைய வேண்டுமென்பதே எனது பேரவா.

குறிப்பிட்ட இப்புனித கைங்கரிய முயற்சியினால் இந்நூல் வெளிவருவதை மனதார வாழ்த்தி அமைகின்றேன்.

— தங்கம்மா அப்பாக்குட்டி

உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர்

## கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

வழங்கிய

# அணிந்துரை

இந்துப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை கோயில்கள். எமது பண்பாட்டின் வளர்ச்சிக்கு அவை காலங் காலமாகப் பெரிதும் உதவி வந்துள்ளன. இலங்கையில் பெருமளவிலான இந்துக்கோயில்கள் எழுந்துள்ளன. அவை பற்றிய விபரங்களைத் தொகுத்து வைத்தல் மிகவும் பயனுள்ள முயற்சியாகும்.

கோவில் ஒன்றுடன் தொடர்புடைய விபரங்களைத் தொகுத்துத் தருவதே தல வரலாறு குறித்த கோவிலில் வழிபடப்படும் தெய்வத்தின் மகிமை, வழிபாட்டு மரபு ஆகிய அம்சங்களைச் சிறப்பாகக்கூறும் புராணங்கள் கூறும் மரபை அடியொற்றித் தமிழகத்தில் தல புராணங்கள் பல எழுந்துள்ளன. இலங்கையிலும் பல ஆலயங்களுக்குத் தல புராணங்கள் உண்டு. ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம், நகுலேசுவர புராணம், ஈழத்துச் சிதம்பரபுராணம், திருக்கோணசல புராணம், கதிர்காம புராணம், திருக்கேதீச்சர புராணம், போன்றவை இவ்வகையிற் குறிப்பிடத்தக்கன. இம்மரபை அடியொற்றி அவ்வப் பிரதேச ஆலயங்களின் தலவரலாறுகள் கும்பாபிஷேகம் போன்ற சிறப்பு வைபவங்களை முன்னிட்டு எழுந்துள்ளன. அண்மைக் காலத்தில் மாவட்டரீதியில் கோயில்கள் பற்றிய வரலாற்றுத் தொகுப்பு நூல்கள் உருவாகியுள்ளன. இவ்வரிசையில் திருகோணமலை மாவட்ட கோயில்கள் பற்றிய நூலும் மட்டக்களப்பு மாவட்ட கோவில்கள் பற்றிய நூல்களும், குறிப்பிடத்தக்கன இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள் பற்றிய நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சார்ந்த சிறப்பு மாணவர்களும் அவ்வப்போது இலங்கையில் உள்ள பிரதான ஆலயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர், இவ்வரிசையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள கோயில்கள் பற்றிய விபரமான தொகுப்பு நூலும் வெளிவருவது மிகவும் இன்றியமையாதது. அண்மைக்காலச் சம்பவங்களினால் ஆலயங்கள் பல பாதிப்படைந்துள்ளன. எனவே அவற்றின் உண்மையான வரலாற்றை வெளிக்கொணர்ந்து அழியாது பேணிப் பாதுகாப்பதற்கு இத்தகைய முயற்சிகள் பெரிதும் துணைபுரிவதாகும். கோயில்கள் பற்றிய இத்தகைய நூல்களின் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தின் பண்பாட்டு வளர்ச்சிபற்றியும் சமயப் பாரம்பரியம் பற்றியும் அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோயில்களின் எண்ணிக்கை அதிகமாகும். எனவே பகுதி பகுதியாக இத்தகைய தொகுப்பினை மேற்கொள்வது பயன்தரும் முயற்சியாகும். அவ்வகையில் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் உள்ள 53 கோயில்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் இந்நூலிலே தரப்பட்டுள்ளன.

இத்தொகுப்பாசிரியர் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களாவர். நீண்டகாலமாக ஆசிரியப்பணிபுரிந்து மிகுந்த அனுபவமிக்கவர். தாம் பெற்ற அனுபவத்தின் துணைக்கொண்டு இந்நூலினைச் செவ்வனே தொகுத்தமைத்துள்ளமை பாராட்டிற்குரியது. குழந்தைக் கவிதைத் தொகுப்பு (1964), மாவை முருகன் கவிப்பூங்கொத்து (1976) யாழ்ப்பாண வரலாற்று ஆய்வுக்குத் துணைசெய்யும் தண்டிகைக் கனகராயன் பள்ளு

(1985) ஆகியவற்றை வெளியிடுவதில் பெரிதும் ஈடுபட்டவர். வெளியீட்டுத்துறையில் மிகுந்த அனுபவம் மிக்க பண்டிதர் அவர்கள் தற்சமயம் தெல்லிப்பளைப் பிரதேச கோயில்கள் பற்றிய தொகுப்பினை வெளியிடுகின்றார். அவரது இம்முயற்சி அனைவ ராலும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்நூலிலே பண்டிதர், தெல்லிப்பளைப் பிரதேசக் கோயில்களைப் பின்வருமாறு வகுத்துள்ளார். அம்பிகை ஆலயங்கள் (12), நடராசர் ஆலயம் (1), விநாயகர் ஆலயங்கள் (8), முருகன் ஆலயங்கள் (2), வைரவர் ஆலயங்கள் (23), வீரபத்திரர் ஆலயம் (1), நாகதம்பிரான் ஆலயம் (1), பெரியதம்பிரான் ஆலயம் (1), அண்ண மார் ஆலயங்கள் (3), முடிமன்னர்ராச ஆலயம் (1) என வகுத்து விபரங்களைத் தந்துள்ளார். ஆலயத்தின் அமைவிடம், ஆரம்பம், காலம், கோயிலமைப்பு, புணருத் தாரணம், நித்திய நைமித்திக பூசை ஒழுங்குகள், கும்பாபிஷேகம் நிகழ்ந்த விபரம், மகோற்சவங்கள், மூலமூர்த்தியின் சிறப்பு, ஐதீகங்கள், பரிவார மூர்த்திகள், தெய் வங்களுக்கென கோவிலில் உள்ள வாகனங்கள், கோயில் சிவாசாரியர்கள், போன்ற விபரங்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. தகவல் தந்தோர் விபரம், தகவல் கிடைக் கும் நூல்கள் ஆகியவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. கோயில் பற்றிய பிரபந்தங்க ளும் ஆங்காங்கு தரப்பட்டுள்ளன. இவை அடிப்படைத் தகவல்களாகவே அமைகின் றன. இப்பிரதேசக் கோயில்கள் பற்றி மேலும் விரிவாக ஆராய முற்படுபவர்களுக்கு இந்நூல் தக்க மூலாதாரமாக அமைய வல்லது.

இந்நூல் வெளிவரும் சந்தர்ப்பம் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அம ரர்களாய இளையதம்பி சின்னத்தம்பி தம்பதியர் நினைவாக இந்நூல் வெளிவருகின் றது. இதனை வெளியிட முன்வந்திருப்பவர்கள் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்க ளும் அமரரின் பிள்ளைகளும், அண்மைக் காலத்தில் மறைந்தவர்களின் நினைவாகக் கல் வெட்டுக்கள், சரமகவிகள் என்பன பெறும் இடத்தில் பயனுள்ள விடயங்களை உள் ளடக்கிய இத்தகைய நூல்கள் நினைவு வெளியீடுகளாக வெளிவருவது மிகவும் வர வேற்கப்படவேண்டியதொன்றாகும். அன்னாரின் நினைவாக அறிவு விருத்திக்கென வெளி வரும் இந்நூலினால் சமுதாயம் சிறந்த பயனடையும் என்பது திண்ணம். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைவதாகுக.

பண்டிதர் அவர்களின் முன்னைய பல பயனுள்ள வெளியீடுகள் இத்தகைய நினைவு வெளியீடுகளாக மலர்ந்துள்ளன. கோயில் பற்றிய இந்நூலும் அவ்வரிசையில் இடம் பெறுகின்றது. பண்டிதர் சி. அப்புத்துரையின் இம்முயற்சி ஏனையவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைகின்றது. அவரது இம்முயற்சியை மனதாரப் பாராட்டுகின் றேன். இம்முயற்சியின் தொடர்ச்சியாகக் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் கோவில் கள் பற்றிய தொகுப்பு நூலொன்றினையும் பண்டிதர் அவர்கள் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இம் முயற்சிக்கு ஏனையோரும் உரிய வகையில் உதவி புரிந்து ஆதரவு வழங்குதல் மிகவும் அவசியமாகும். இத்தகைய பயனுள்ள ஆக்கபூர்வமான முயற்சிகள் சிறப்படைய எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் என்றென்றும் துணை நிற்பதாக!

**ப. கோபாலகிருஷ்ணன்**

இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
*03-10-1988.*

உ

சிவமயம்

# முகவுரை

இறைவன் திருவடி நீழலைச் சரணடைந்த தெல்லிப்பளை, இளையதம்பி சுப்பிரமணியம் தம்பதியர் நினைவு நிலைக்கத் தெய்வமணங் கமழுவதொரு நூல் வெளிவர வேண்டுமென அவரது அருமைப்பிள்ளைகள் விரும்பினர். அமரத்துவமெய்திய அன்னை சிவஞானமும் தந்தை சுப்பிரமணியமும் தெல்லிப்பளை ஸ்ரீ மகாமாரி அம்பாளிடம் நீங்காத பற்றுள்ளங் கொண்டவர்கள். எனவே அவர்கள் ஆத்மார்த்தமான வழிபடு தெய்வம்பற்றிய வரலாற்றினை முதலாகக்கொண்டு தெல்லிப்பளைக் கிராமத்துள்ள ஐம்பத்துமூன்று சைவாலயங்களின் வரலாறுகளையும் தொகுத்து வெளியிடுவது நல்லது என்ற கருத்து அவர்களுக்கு ஏற்புடையதாயிற்று.

அந்த விருப்பைச் செயலாக்கும் பணிப்பைப் பெற்ற யாம் அவர்களின் அன்பு மருமகன் க. க. வேலாயுதபிள்ளை, இளவாலை செல்லத்துரை நாவரசன் என்போருடன் சேர்ந்து தெல்லிப்பளைக் கிராமத்துக் கோயில்களைத் தரிசித்தோம். அமைப்புக்களைப் பார்வையிட்டோம். உரியவர்களிடம் தகவல்களைக் கேட்டறிந்தோம். சந்தித்தவர்களிடமெல்லாம் உசாவி உண்மை நிலையறிய முயற்சித்தோம். கிடைத்த கருத்துக்களைத் தொகுத்து நூலாக்கியுள்ளோம்.

ஆலயங்கள் பல மறைந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் மாற்றங்கள் அடைந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் எதிர்காலச் சமுதாயம் பண்பாட்டு வளர்ச்சி கலாச்சார வளர்ச்சி என்பவற்றில் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்பொழுது இந்த வரலாற்று நூல் சிறந்ததொரு வழிகாட்டியாக அமையலாம் என்ற உயர்ந்த நோக்குடனேயே இதை ஆக்கியுள்ளோம். காங்கேசன் கல்வி வட்டாரத்துள்ள சகல ஆலயங்களினவும் வரலாறு நூலாகவேண்டுமென்ற முன்னைநாள் கல்வி அலுவலர் திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்கள் உயர்நோக்கு எமக்குப் பேருதவியாயிற்று.

இந்நூலாக்கத்திற்கு வேண்டிய நல்ல கருத்துக்களை நல்கி வாழ்த்துரையும் வழங்கிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், நூலினை முழுமையாகப் பார்த்துப் பயனுள்ள அரிய கருத்துக்களுடன் அணிந்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள், இப்பணியில் எம்முடனுகி நின்று முயன்ற, அமரர்களின் மருமகன் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்கள், இளவாலை செல்லத்துரை நாவரசன் அவர்கள், கிடைத்த தகவல்களை எமக்குத் தந்துதவிய ஆலயப் பணியாளர்கள், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தினர், காங்கேயன் கல்விவட்டார அலுவலகத்தினர், வரலாறுகளைத் தொகுப்பதற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களுடன் ஊக்குவிப்புத் தந்த யாழ் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியஐயா அவர்கள், நூல் அழகுற அமைவதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்த ஓவியர் ''லங்கா'' படிகளை ஒப்புநோக்கிச் சரிகண்டுதவிய இளவாலை சைவப்புலவர் சு. செல்லத்துரை என்போரது அன்புடனுய பேருதவிக்கு என்றும் நன்றியுடையோம்.

குறுகியகால வேளையில் நாம் விரும்பியவாறு மிக அழகாக இவ்வரலாற்றுநூலை அச்சிட்டுதவிய ஏழாலை மகாத்மா அச்சகத்தினர்க்கு என்றென்றும் நன்றியுடையோம்.

மயிலங்கூடல்,
இளவாலை, 1988-10-06.

சி. அப்புத்துரை

சிவமயம்

# ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயம்

தெல்லிப்பளைப் புகையிரத நிலையத்திற்கு அண்மையில், அதன் வடகீழ்த் திசையில், தெல்லிப்பளை கட்டுவன் வீதி ஓரமாக அம்பாள் எழுந்தருளியிருந்து அருண்மழை பொழியும் இடந்தான் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயம் என்பது. ஆதியில் இலந்தை மரங்கள் நிறைந்தவொரு தோப்பாக இந்த இடம் இருந்தது என்றும், நடுவே நின்றதொரு வில்வமர நீழலில் சூலமொன்று வைத்து வழிபாடாற்றப்பட்டதென்றும் வாய்மொழிவழிவந்த செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. இந்த இடத்திலே வழிபாடு தொடங்கப்பட்ட ஆரம்ப காலம் பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை. சுமார் 200 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கொள்ளலாம்.

மேற்குப்புறமாக நின்ற வில்வமரத்தடியில் ஒரு சூலமும் மற்றொரு இலந்தை மரத்தடியில் கல்லும் வைத்து வழிபடப்பட்டதென்றும், அச்சின்னங்கள் வயிரவரையும் அம்மனையும் குறிப்பன என்றும், ஆதியில் வடபத்திரகாளி அம்பாள் ஆலயம் எனப் பெயர் வழங்கப்பட்டதென்றும், பின்னர் முத்துமாரி அம்பாள் எனப் பெயர் மாற்றம்பெற்றதென்றும் இப்போ ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆகிவிட்ட அம்மை இன்னும் என்னென்ன மாற்றங்களைக் காண்பிப்பாளோ! யாமறியோம், எல்லாம் அவள் செயல் என்றும் தகவல் தந்த தெல்லியூர் செ. நடராசா அவர்கள் ஆதியில் கிழக்கு வாயில் ஆலயமாக இருந்தது, பின் மேற்கு வாயிலாக ஏன் மாற்றம் பெற்றதெனத் தெரியவில்லை என்றும் சொன்னார்கள்.

இந்த ஆலயம் உள்ள இடம் 1987 ஒக்டோபரின் முன் தெல்லிப்பளை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சார்ந்ததாக இருந்தது. இப்போ தெல்லிப்பளைக் கிராம சேவையாளர் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் தெல்லிப்பளைக் கிளையின் உட்பட்டது இந்த இடம். கிளை அலுவலகம் ஆலயத்திற்கு வடமேற்காகச் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திற் கொல்லங்கலட்டியில் உள்ளது.

இன்றைய ஆலயக் காட்சியின் காலம் 1981 என்று கிடைக்கும் செய்திகள் மூலம் உணர முடிகின்றது. இதற்கு முன்னரும் நான்குமுறை புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுள்ளன. காலக் கூறுகளை நினைவிற்குக் கொண்டுவர முடியவில்லை. நாம் அறிந்தவரையில், இறுதியாக நடைபெற்ற புனரமைப்பு வேலைகளின்பின் 1981 ஆனி உத்தர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தெல்லிப்பளையைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் கரதுக வரதக் குருக்கள் இந்தக் கும்பாபிஷேகத்திற்குத் தலைமைக் குருவாக அமர்ந்து எல்லோர் மனமும் நிறைவாகும் வண்ணம் நிறைவு செய்தார்கள். தினமும் மூன்று காலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தின் மகோற்சவம் பங்குனி உத்தரம் தீர்த்தோற்சவமாக அமையும் வகை பத்து நாள்கள் நடைபெறும். பங்குனிப் பூரம் தேர்த்திருவிழாத் தினமாகும். மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாவது என்பதும் குறிப்பிடத்தக்கது. கருங்கல்லாலாய ஸ்ரீ மகா

மாரி அம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்டுள்ள இந்த ஆலயத்தில், விநாயகர், சுப்பிரமணியர், இலட்சுமி, பழைய அம்பாள், நடேசர், பெருமாள், வயிரவர், சண்டேசுரர் என்னும் பரிவார மூர்த்தங்களும் உள. இவர்கள் வீதியுலா வருவதற்கு உதவும் வகை சிங்கம், இடபம், குதிரை, நாகம், யானை முதலிய வாகனங்களும் இருக்கின்றன.

சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆமப் பூரம், ஆவணி மூலம், நவராத்திரி, ஐப்பசிப் பௌர்ணமி சார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசி மகம் என்பனவும் இந்த ஆலய விசேட திருவிழாக் காலங்களாம்.

1975இல் 21 அடி உயரமுள்ள இராச கோபுரம் மூன்றடுக்கு உள்ளதாக அரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியாகும் நிலையை அண்மியுள்ளது. 1958இல் உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னையா அப்பாத்துரை சகோதரர்களால் உருவாக்கப் பெற்ற தேர், அடியார் மனத்துச் சாந்தியை நிலை பெறச் செய்கின்றது. மேற்கு நோக்கிய இவ்வாலயத்தில் மணிக்கூண்டுக் கோபுரம் வழிபாட்டுடன் கூடிய சீமேந்திலே செய்யப்பட்ட சரஸ்வதி சிலை ஒன்று உள.

சித்திராப் பௌர்ணமி தினத்தன்று மாலை ஆறு மணிக்குச் சுமங்கலிகள் கலந்து கொள்ளும் திருவிளக்குப் பூசையும், கௌரி நோன்பு அர்ச்சிப்பும் சிறப்பாக இங்கு நடைபெறுகின்றன.

பஞ்சாட்சரக் குருக்கள், செல்லையாக் குருக்கள் நடராசக் குருக்கள், அவரது மகனின் மகன் சிவசாமிக் குருக்கள் கரகுகவரதக் குருக்கள் (1971 — 1981), 1981 ஆனி தொடக்கமாக சதாசிவக் குருக்கள் திருச்செந்திநாத சர்மா என்போர் முறைமுறையே அர்ச்சகர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். கோயில் பொதுவானது என்று கொள்ளப்பட்ட போதும் நிர்வாகப் பொறுப்பு முழுமையாக இப்போ இன்றைய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ திருச்செந்திநாத சர்மாவாலேயே நிறைவு செய்யப்படுகின்றது.

தகவல் :

பிரம்மஸ்ரீ ச. திருச்செந்திநாத சர்மா

ஜோதிடம் பக்கம் ஒன்று - சோதிட ஆசான் தமிழ்மணி செ. தெல்லியூர் குறிப்பிடுவது: தெல்லிப்பளை ஸ்ரீ மகா மாரி அம்பாளுடன் தொடர்புடைய மக்கள் அச்சுவேலி பத்தமேனியுடன் தொடர்புடையவர்களாய் இருந்தார்கள். அதனல் அந்தப் பகுதி மக்கள் இன்றும் இவ்வாலய விழாக்களில் பெரும் பங்குகொள்கின்றார்கள்.

தெல்லிப்பளை அச்சுவேலி தொடர்புடைய வேலுப்பிள்ளை என்பவரின் மகள் அன்னப்பிள்ளை ஊமையாக இருந்தவர் — அவருக்கு அருவது வயது நடந்துகொண்டிருந்தபோது தந்தையார் வில்வமரத்தின்கீழ் இருந்த அம்பாளுக்கு ஒரு கொட்டில் அமைக்க விரும்பி நடைமுறைப் படுத்திக்கொண்டு இருந்தார். விளையாடிக்கொண்டிருந்த குழந்தை ''அப்பா'' என்று கூவியதைக் கேட்ட தந்தையாரும் மற்றையோரும் பேரானந்தம் அடைந்து அம்பாளின் அருளை எண்ணியெண்ணி வியந்தனர்.

தகவல் :

திருமதி பராசக்தி பரமேஸ்வரன்

சுன்னும் ஸ்ரீ குமாரசாமிப் புலவர் பாடிய ஊஞ்சற்பா எப்படியோ தவறியது காரணமாக அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் பாடிய ஊஞ்சற்பா இப்போ பயனுடையதாக அமைந்துள்ளது.

---

உ

சிவமயம்

யாழ். தெல்லிப்பளை தில்லையிட்டி ஸ்ரீ மகாமாரியம்மை

# திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

பொன்னழகு முடியானே பொருப்பின் மீது
பொருந்துமறை வரைந்தவனே புவனங் காக்கும்
அன்னபரி பூரணித்தாய் அழைக்க வந்த
ஆனைமுக நாயகனே தெல்லி யூரில்
இன்னருள் செய் தமர்ந்தமகா மாரியம்மை
இசைந்தாடல் புரியும்பொன் னூஞ்சல் பாடக்
கன்னலொடு தெங்கறுகு கனிவி ரும்பும்
கணபதியே நின்திருத்தாள் காப்ப தாமே.

## நூல்

1. மான்பயிலும் கரத்திறைவன் வாம பாகம்
மருவிவரு மறையாக மங்கள் ஓங்க
தேன்பயிலும் காஞ்சிமா வடியில் வந்து
சிவபூசை செய்தவளே தேவர் வேண்ட
நான்பயிலு மசுரனைச்சங் காரம் செய்து
நலம்சுரக்கும் கோணமெலாம் நடித்த தாயே
வான்பயிலும் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

2. சிரம்பூத்த நான்குதூண் வேத மாக
சிவம்பூத்த விட்டமா கமமே யாக
தரம்பூத்த பீடமோங் கார மாக
தனம்பூத்த நாண்களுயர் கலைக ளாக
கரம்பூத்த மாலைதிரு முறைக ளாக
கவின்பூத்த தீபமுப நிடத மாக
வரம்பூத்த தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

3. இயல்பரவு மிசைமகளிர் கீதம் பாட
ஏத்துமடித் தொண்டர்மலர்ப் பாதம் சூட
அயல்பரவு ஜயைவிஜயை அலங்க ரிக்க
ஆதவனு மம்புலியும் ஒளிவி ளக்க
செயல்பரவு மரம்பையர்ஐம் முழவு தீட்ட
திருமகளும் கலைமகளும் வடந்தொட் டாட்ட
வயல்பரவு தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

4. உளங்கனியும் அன்பனுக்காய்த் தோடு வீசி
ஓங்கார மதிகாட்டி உலக மெல்லாம்
விளங்குதிரு வருள்பெருக, ஆல வாயில்
விறற்செங்கோல் பிடித்தவளே விநாய கர்க்குப்
பழங்கொடுத்து முருகனுக்குப் படைகொ டுத்துப்
பாராட்டும் பைங்கிளியே எம்மைக் காக்க
வளங்குளிரும் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

5. எண்ணரிய அண்டமெலாம் இருந்து நித்தம்
ஏத்தினரைக் காக்கும்பார் வதியே, போற்றும்
புண்ணியர்க்குத் தனித்துணையே, திகழும் ஐந்து
பூதமென நிறைந்தவளே, புலன டக்கி
விண்ணவரும் காண்பரிய வேத முத்தே
மிளிர்சச்சி தானந்தக் கடலே, சைவ
வண்ணமிகு தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே யாடீ ரூஞ்சல்.

6. நிருதர்குல மழிப்பதற்கு வேல்கொ டுத்த
நின்மலியே திருவாலங் காடு சேர்ந்த
கருதுமூர்த் துவநடனம் பரம னுடன்
காளியெனச் சடைதுளக்கி யாடி நின்ற
பெருமகளே, படியளந்த உமையே, ஞானப்
பிரணவத்தின் ஒருவடிவே பிறையான் சூடும்
மருமலரே தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

7. கையகத்தே கலசமொடு கட்க மேந்தி
கம்பமுயர் கரகத்தில் தவம்பு ரிந்து
பையரவா பரணனிடம் வரங்கள் வாங்கி
பாரெல்லாம் வருத்துபல பிணித ணித்து
மையணைய கொடுமாரா சுரனை மாய்த்து
வயச் சிங்க மிசையேறி நீதிநாட்டி
வையகம்சூழ் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

8. காணுமனற் சடையாட மகுட மாட
காதணியும் மூக்குத்தி மணியு மாட
பூணுமங் கலநாணும் தனமு மாட
பொன்மருங்கின் துகிலாட வளைக்கை யாட
பேணுமிரு பதமாட விழிக ளாட
பிரகாசப் புன்னகைச்செவ் வதன மாட
மாணதிக தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

9. ஐங்கரனும் குருபரனு மருகி ருக்க
அம்பலத்து நாயகனூர் அருள்சு ரக்க
பங்கயனும் நாரணனும் கிரியை பார்க்க
பாமகளும் பூமகளும் விருது தூக்க
தங்கியஎண் டிசையதிபர் வாயில் காக்க
தழுவுமொன் பான்கோளர் ஏவல் பூக்க
மங்களம்சேர் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

10. செஞ்சுடர்ப்பூஞ் சடையாளே ஆடீ ரூஞ்சல்
திரிசூலப் படையாளே ஆடீ ரூஞ்சல்
அஞ்சுநம பயம் தீர்ப்பாய் ஆடீ ரூஞ்சல்
அடியரைநின் பதம்சேர்ப்பாய் ஆடீ ரூஞ்சல்
பஞ்சமொடு பிணியறுப்பாய் ஆடீ ரூஞ்சல்
பணிந்திடுவார் பிழைபொறுப்பாய் ஆடீ ரூஞ்சல்
மஞ்சுதவழ் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

## வாழி

சூழ்புவியில் மனுதர்ம சோதி வாழி
சுருதிதரு சிவானந்தச் செல்வம் வாழி
ஏழ்பவநோய் தீர்த்திடுமைந் தெழுத்து வாழி
இதிகாசம் புராணம்திரு முறைகள் வாழி
தாழ்வில்லாச் சமாதான சமூகம் வாழி
தமிழ்வாழி தெய்வீகத் தொண்டர் வாழி
வாழ்வுதவும் தெல்லிநகர்த் தில்லை மேவும்
மகாமாரி திருவடிகள் வாழி வாழி.

## மங்களம்

ஆனைமுக நாதனுக்கு மங்களம்
அம்பலத் தியாகனுக்கு மங்களம்
ஞானபரி பூரணிக்கு மங்களம்
நாகபள்ளி நாரணற்கு மங்களம்
வானமுயர் வேலனுக்கு மங்களம்
மலர்மகட்கும் கலைமகட்கும் மங்களம்
மானமிகு காவலர்க்கு மங்களம்
மகாமாரி யம்பிகைக்கு மங்களம்.

சுபம்

ஆக்கியோன் : அருட்கவி சீ. விநாசித்தம்பி

கருணாநிதியாகிய சிவபெருமான் புறத்தே திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளார் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவார். ஆதலால் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

— சிவாலய தரிசன விதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ

சிவமயம்

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து தெற்கு நோக்கி யாழ்நகர் செல்லும் பிரதான வீதியில் சுமார் 1500 மீற்றர் தொலைவில் வீதிமருங்கின் மேற்குப்புறமாக அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அழகுமிகு அலங்கார நுழைவாயிலையும் எழில்மிகு வானளாவியுள கோபுரத்தையும் தரிசிக்கலாம். வீதியை விட்டிறங்கி நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் அமைப்புக்களைக் காணுகிறோம். வலப்புறத்தே அன்னை தீர்த்தமாடுதற்குரிய அற்புதத் தீர்த்தத் தடாகம் ''துர்க்கா புஷ்கரணி'' எம் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொள்கின்றது. முதலாவது மதிலைக் கடந்து மேலும் உள்ளே செல்கின்றோம். இடதுபுறத்தே தேர்முட்டி, அதன் கீழ்ப்புறம் அலுவலகப் பகுதி; வலப்பக்கம், அந்த இடத்து வேண்டிய பொருட்களைப் பெற வாய்ப்பளிக்கும் விற்பனை நிலையம்; முன்னே, புராணக் கருத்துக்களை எடுத்துக் கூறும் அழகிய சிற்பங்கள் மலிந்த, தமிழ்நாடு திரு. எஸ். தேவலிங்கம் அவர்கள் சிந்தனையில் மலர்ந்த, 65 அடி உயரமான ஐந்தடுக்குக் கோபுரம் நிமிர்ந்து நிற்கின்றது. கோபுரத்தின் தென்புறத்தே சங்கநிதி, துவாரபாலகராய பாலகணபதியையும், வடபுறத்தே துவாரபாலகராய சுப்பிரமணியரையும், பதுமநிதியையும் பார்க்கின்றோம். கோபுரத்தை வழிபட்டு உள்ளே செல்வோம். தெற்கே அலுவலகத்தில் அன்பு முகங்கள் அமைதியோடு வழிப்படுத்துகின்றன. வடக்கில் நீர்த்தொட்டி; இருமருங்கும் செங்கழுநீர், தாமரை, நீர்த்தாவரம் வளர் அமைப்புக்கள், கால்கழுவி மேலங்கிகளை (ஆண்கள்) நீக்கி உள்ளே செல்வோம். கொடிக்கம்பத்துக்கு இப்பால் நின்று வணங்கி வலம் வருவோம். பாகசாலைகளைக் கடந்து மேற்கு நோக்கி மெல்ல நகர்வோம். எழுந்தருளி வாயில் அம்பாளின் கவின்தருகாட்சி எல்லோரையும் சொக்கவைக்கும். தென்மேற்கில் விநாயகப்பெருமான் கருணைப்பொழிவு அநுபவம் கிடைக்கின்றது. விநாயகர் ஆலயத்தின் தெற்கே சர்ப்பவாகனம், யானைவாகனம், சிங்கவாகனம், ஸ்ரீசக்கர பீடம் என்பன காட்சிதருகின்றன கர்ப்பக்கிருகத் தூபியை வழிபடுகின்றோம். ஆலய அபிவிருத்தியுடன் தான் ஒன்றிச் செல்லவில்லையேஎன்றுகர்ப்பக்கிருகப்பண்டிகை முணுமுணுப்பதை யாம் உணர்ந்தோம். அப்பாலே செல்கின்றோம். கஜலட்சுமி ஆலயம், முருகன் ஆலயம். அவற்றைக் கடந்து கிழக்கு நோக்கித் திரும்பிக் கோமுகையைப் பார்க்கின்றோம். சண்டேசுரப்பெருமான் அமைதியுடன் அவதானிப்பது தெரிகின்றது. வசந்தமண்டபம் பளிச்பளிச்சென்று மின்னும் பித்தளையாலான அலங்கார வாயில் வேலை, உள்ளே அம்பாள் கொலுவிருக்கும் காட்சி – எத்தனை யுகம் வேண்டுமானாலும் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். ''மனிதப் பிறவியும் வேண்டுவதே'' என்று அப்பர் கூறிய உண்மையை இந்த இடத்திலே உணரமுடிகின்றது. அப்பால் யாகசாலை, நாகதம்பிரான் வயிரவக் கடவுள் ஆலயங்களையும் தரிசித்து பலிபீடத்தின் முன்னே மீண்டும் வணங்கி இரண்டாவது வீதியையும் பார்த்துவிட வேண்டும் என்னும் ஆவலில் செல்கின்

றேம். தெற்கே திரும்பியதும் மருங்கில் நிவேதனப் பொருட்கள் பாகம்செய்யும் நீண்ட மண்டபம், நாயன்மாரொடு காட்சிதரும் திருமுறை மடம், அன்ன பூரணி கலியாண மண்டபம், மகளிரில்லம், கோசாலை, அந்தணர் வசிப்பிடம், அகதிகள் இல்லம், அன்னதான மண்டபம் முதலிய பல அமைப்புகள் காட்சி தருகின்றன. அங்கே ஒரு தடாகம் – தாமரைமலர் போன்ற அமைப்பு; நீலோற்பல மலர்கள் நிறைய மலர்ந்துள்ளன. வடமேற்கில் இசைப்பயிற்சி வகுப்பு நடைபெறும் மண்டபம், இவ்வண்ணம் தரும் காட்சி பலமுறை பார்க்கவேண்டும் போன்ற விருப்பை நல்கும். வாகனங்கள் சிங்கம் 5, குதிரை 2, யானை, மயில், காமதேனு, பத்மாசனம், நாகம், கேடகம், ஸ்ரீசக்கரபீடம் முதலியன உண்டு என்று அறிந்தோம்.

இத்தகு ஆலயத்தின் பூர்வீகம்:— 250 ஆண்டுகட்கு முந்தியது.[1] உழுகுடைப்பதி வவுனவத்தையைச் சேர்ந்த சைவநன்மகன் கதிர்காமர் என்பவரால் 1760ஆம் ஆண்டளவில் இந்த இடத்திலிருந்த இலுப்பைத் தோப்பில் மரத்தடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காசி சொப்பனேஸ்வரி பீடத்திலிருந்து பெறப்பட்டதென்று கருதப்படும் யந்திரத்தை (துர்க்காசக்கரம்) வைத்தே வழிபாடு ஆரம்பமானது. அப்பகுதியில் வாழ்ந்த நாகநாதஉடையார் என்பார் முதலில் ஒரு சிறிய ஆலயத்தை அமைத்து காஞ்சிபுரத்திலிருந்து வந்த அந்தணப் பெருமகனுரை அர்ச்சகராக நியமித்து நித்திய நைமித்தியங்களை நடைமுறைப்படுத்தினர். பின்னர் கோயில் புனரமைப்புச் செய்யப்பட்டு 1820இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மாவை முருகன் எழுந்தருளி வந்து வன்னிவாழை வெட்டும் உற்சவம் 1829இல் இருந்து தொடருகின்றது.

தனி முகாமையிலிருந்த இந்த ஆலயம் 1948 இல் பதினெரு பேரைக் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்புவிக்கப்பட்டது. 1965 இல் மேலும் 18 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றைத் தெரிந்து பரிபாலனத்தை அதனிடம் ஒப்புவித்தனர். அந்த நிர்வாகக் குழுவே மீண்டும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுக் கடந்த 24 ஆண்டுகளாக எல்லோரும் போற்றும் வண்ணம் பரிபாலனத்தைக் கவனிக்கின்றது.

1955க்கு முன்[2] ஒரு அரை நூற்றுண்டுக்கு மேற்பட்ட காலம் இந்த ஆலயத்தைப் பொறுத்தவரை இருண்ட காலம் என்று சொல்வது தவறுகாது. அதனுல் அக்காலப்பகுதி வரலாறுகளைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியவில்லை.

பின்னர் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று 1965 ஆவணி ஓணத்தில் மாவை பிரம்மஸ்ரீ இரத்தினக் குருக்கள் துரைசாமிக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து 1981-04-17இல் இராஜகோபுரத்திற்கும் சேர்த்து அறிவு ஆற்றல் சீலம் என்பவற்றுல் உயர்ந்த[3] அந்தணர்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நிறைவு கண்டது.

1977 ஜனவரி 27இல் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பரிபாலனசபைத் தலைவர் பத

---

1. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
— தங்கம்மா அப்பாக்குட்டி - 1988 பக்கம் 1
2. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக மலர் 1981 பக்கம் 14
3. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக மலர் 1981 பக்கம் 29

வியை ஏற்றபின் 1978இல் சித்திரத் தேரினையும், பொது அலுவலகத்தையும், 1980இல் ஞானசுரபி மண்டபத்தையும், 1981இல் இராஜகோபுரம், அலங்கார நுழைவாயில் என்பவற்றையும், 1982இல் துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகம், அந்தணர் இருப்பிடம் என்பவற்றையும், 1984இல் அன்னபூரணி கலியாண மண்டபத்தையும், 1985இல் சப்பறம், பக்தர்கள் விடுதி, மகளிரில்லம் என்பவற்றையும், 1986இல் கோசாலை, இசைக்கலை மண்டபம் என்பவற்றையும், 1987இல் அகதிகள் சாலையையும், 1988 ஒகஸ்ற் வரையுள்ள காலப்பகுதியில் அன்னதான மண்டபம், அலுவலர் இருப்பிடம், என்பவற்றையும் செயற்குழு நிறைவாக்கியுளது. வாயில் பித்தளை அலங்கார வேலைகள், எழுந்தருளிக்கு வெள்ளி அலங்கார வேலைகள், நீலோற்பல மலர்த் தடாகம் முதலியனவும் அமைப்புப் பெற்றுள்ளன.

82 பரப்பு நிலத்தைக் கொண்ட இந்த ஆலயம் ஏழு மண்டபங்களை உடையது. தினமும் 5 மணி, 8 மணி, 11 மணி, 6 மணி, 6-30 மணி என ஐந்து வேளைப் பூசை நடைபெறுகின்றது. அர்ச்சகராகப் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சர்மா நீலகண்ட சர்மா பணிபுரிகின்றார். கோவிற் குருக்களாகச் சிவ ஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் சுந்தரேஸ்வரக் குருக்கள், கிரியைகளை நிறைவு செய்கின்றார்கள். இந்த ஆலயத்தின் முதற் கொடியேற்றம் நடந்த 1968ஆம் ஆண்டு விழாவில் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் சமுகத்தில் சிவஸ்ரீ ஐயாச்சாமிக் குருக்கள் வயித்தியநாதக்குருக்கள் கொடியேற்றி வைத்தார்கள்.

பூரணைத் தினங்கள், செவ்வாய்க் கிழமைகள், ஆடிப் பூரம், மார்கழிச் சதுர்த்தி ஆகிய வேளைகளில் உள்வீதியிலும், மகோற்சவ வேளை, வருடப் பிறப்பு, ஆடிக் கடைசிச் செவ்வாய், விஜயதசமி, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி, பங்குனிக் கடைசிச் செவ்வாய் ஆகிய வேளைகளில் வெளிவீதியிலும் அன்னை உலாவந்து அடியவர்களுக்கு அருள்புரிகின்றார். ''ஒருகொம்பைக் கொண்டு தமிழ் வெற்பிலேற்றி'' என்னும் முதலையுடைய ஊஞ்சற் பாடலும் இவ்வாலயத்திற்குண்டு.

ஸ்ரீ துர்க்காதேவி தொடர்பாக வெளியாகிய நூல்கள்:

1. துர்க்காதேவி பதிகம் 1958
2. துர்க்காதேவி ஆலய வரலாறு 1963 — பண்டிதர் மு. கந்தையா, சிவஸ்ரீ குக சர்மா தங்கம்மா அப்பாக்குட்டி — தொகுப்பு
3. துர்க்காதேவி பாமாலை — அருட்கவி சீ. விநாசித்தம்பி
4. ஸ்ரீ துர்க்காதேவி தோத்திரம் — வட்டுக்கோட்டை த. கந்தசாமி
5. அன்னை துர்க்கா அருட்பெயர் நூற்றெட்டு— பண்டிதர் த. சுப்பிரமணியம்
6. துர்க்கா தேவஸ்தான சித்திரத் தேர் சிறப்பு மலர் 1978 — தேவஸ்தான வெளியீடு
7. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகாகும்பாபிஷேக மலர் - 1981 — தேவஸ்தான வெளியீடு
8. துர்க்காதேவி அந்தாதி — திருப்பாதிரிப்புலியூர் கா. பா. வேல்முருகன்
9. தெல்லிப்பழை அன்னை துர்க்காதேவி திருப்பள்ளி எழுச்சி — 1982 — கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை
10. தடாகப் பிரதிட்டை மலர் 1982 — தேவஸ்தான வெளியீடு
11. துர்க்கா துதி — 1983 — க. ஸ்ரீதரன்
12. துர்க்காதேவி திருவந்தாதி — அருட்கவி சீ. விநாசித்தம்பி
13. துர்க்காபுரம் தொழுமினே 1986 — மல்லை நம. சிவப்பிரகாசம்

தகவல்: சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

உ

சிவமயம்

# தோதரை அம்மன் ஆலயம்

தெல்லிப்பளை கிழக்கு காளியம்பாள் ஆலயத்திலிருந்து தெற்கு நோக்கிச் சென்று மேற்கே திரும்பி 800 மீற்றர் வரை செல்ல வயலை அண்டிய நிலத்தில் தோதரை அம்பாளைத் தரிசிக்கலாம். பரந்து வளர்ந்த வேப்ப மரங்கள் நிறைந்த சோலையிலே அம்பாள் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்றார்கள். தலவிருட்சமாகச் ''சங்காணி'' என்னும் பெயருடைய ஒரு மரம் கர்ப்பக்கிருகத்தின் பின்னே நின்றது. ஒரு சோடி சிலம்பு அந்த மரத்தில் இருந்ததென்றும் கதை உண்டு. சங்காணி என்னும் மரம் வருடத்தில் ஒருமுறைதான் பூக்குமென்றும், ஓரேயொரு பூவை மட்டுந்தான் பூக்குமென்றும், அதுவும் பங்குனிக் கடைசி வெள்ளிக்கு அண்மையாகப் பூக்குமென்றும், பூவைக் கண்டதும் ஆலயத்தில் பொங்கல் நடைபெறும் என்றும் அறிகின்றோம். யாரோ தூர்த்தர்கள் அந்த மரத்தை வெட்டிவிட்டனர் என்று சொல்லுகின்றனர்.

மிகப் பழைமை வாய்ந்த இந்த ஆலயம் 250 ஆண்டுகட்கு முற்பட்டதென்று எண்ணத் தோன்றுகிறது. ஸ்ரீ துர்க்கையம்பாள் ஆலயத்திற்கு மக்கள் கூட்டம் செல்வது போன்றதொரு நிலை முன்பு இந்த ஆலயத்திற்கு இருந்ததாம். அயற்கிராம மக்கள்கூட வழிபாட்டிற்காக இந்த ஆலயத்திற்கு வரும் வழக்கம் முன்பு மலிந்திருந்தது. இப்போ பல ஆண்டுகள் ஆதரிப்பார் இல்லாத நிலையில் ஆலயச் சூழல் பற்றைக்காடாக மாறத் தொடங்குகின்றது. இந்தச் சீர்கேடு சமீபத்திய அரச படைகளின் ''செல்'' தாக்குதலினால் மேலும் விரிவாகியது. சுவர்கள் உடைக்கப்பட்டு-கூரைகள் சின்னபின்னமாக்கப்பட்டுப் பாழ்பட்டுக் கிடக்கின்றன. சுவாமி ''பாலஸ்தாபனம்'' செய்யப்பட்டுள்ளது. புனருத்தாரண வேலைகள்... ?

இந்த ஆலயம் சிவஸ்ரீ இராமசாமி ஐயாவிற்குச் சொந்தமானது. இவரது பரம்பரையினருக்கு முகாமை. நிலம் 12 பரப்பு முன்னுள்ளோர் கோயிலுக்கெனக் கொடுத்தது. கிழக்கு வாயிலை உடைய இந்த ஆலயத்தின் பின்னே 15 பரப்பு வயல் நிலமும் உண்டு. ஆலயத்தைத் தொடக்கியவரின் மைந்தன் சிவ ஸ்ரீ இராமசாமி ஐயர் பாலசுப்பிரமணிய ஐயர் காலத்திலே சுண்ணாம்பு, மணல், கல் கொண்டு கட்டடம் அமைக்கப்பட்டது. அந்த வேளையிலே, 1944இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு 12 நாள்கள் அலங்காரத் திருவிழாவும் நடைபெற்றுள்ளது. பிரம்ம ஸ்ரீ பத்மநாதக் குருக்கள் ஸ்ரீநிவாசக் குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திராப் பூரணை, ஆடிக் கடைசிச் செவ்வாய் என்னுந் தினங்களில் விசேட திருவிழா நடைபெற்றது. குதிரை, மயில், ரிஷபம் என்னும் வாகனங்கள் இருந்தன. அவை அழிந்துவிட்டன. 1986 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

பிள்ளையார், வயிரவர், நாகதம்பிரான் பரிவார மூர்த்தங்களாக உள. பலிபீடம் முதலியனவும் இருந்திருக்கின்றன. இராஜராஜேஸ்வரி அம்பாள் கர்ப்பக்கிருகத்தை அலங்கரித்துள்ளார். சேதமடைந்துள்ள இந்தப் பழம்பெருமை வாய்ந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியது. அடியவர்கள் சிந்திப்பார்களாக. இவ்வாலயத்திற்கு ஊஞ்சற்பாடல் இருந்ததென்றும் சமீப கால அவலங்களாலே தொலைந்து விட்டதென்றும் தெரிகின்றது.

தகவல்: சிவஸ்ரீ வாஞ்சிநாதையர் சிவகாமசுந்தரியம்மா
சிவஸ்ரீ இருஷ்ணமூர்த்திக் குருக்கள் ரெங்கநாயகியம்மா

உ
சிவமயம்

# யூனியன் கல்லூரி
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வளவின் மேற்குப்புறத்தே சிவ லிங்கப்பூ மரத்தினைத் தலவிருட்சமாகக் கொண்ட ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தைப் பார்க்கின்றோம். அன்றைய அதிபர் திரு. க. பாலசுந்தரம் அவர்களைத் தலைவராகக்கொண்ட அபிவிருத்திச் சபையின் ஊக்குவிப்புடன் முகைகொள்ளத் தொடங்கிய இவ்வாலயம் 1986–09–10 புதன்கிழமை அனுஷ நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. நகுலேஸ்வரம் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களைத் தலைமைக் குருவாகக் கொண்ட அந்தணப் பெருமக்கள் கிரியைகளைச் செய்தார்கள். இந்தக் கும்பாபி ஷேக தினத்தை முதலாகக் கொண்டு 12 தினங்கள் அலங்கார உற் சவம் நடைபெறுகின்றது. விஜயதசமித் தினத்தன்று சுவாமி வீதியுலா வருவதுண்டு.

பௌர்ணமித் தினங்கள், சித்திரைச் சித்திரை, ஆடிப் பூரம், மார் கழித் திருவாதிரை, தைப் பொங்கல், தைப் பூசம், சிவராத்திரி ஆய வேளைகளில் விசேட வழிபாடு நடைபெறும்.

மூன்று மண்டபங்களைக் கொண்டதாக இவ்வாலயம் விளங்குகின் றது. இவ்வாலய சிற்பாசாரியார் திரு. வே. சண்முகராசா அவர்கள். 1987 தைப் பூசத்திலன்று மகாமண்டபத்திற்கு அத்திவாரமிடப்பட்டுள் ளது. இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் செய்த "திருவளரும் தெல்லியூ னியன்கல் லூரித் திகழ்வளவின் வடமேல் பால்", என்று தொடங்கும் ஊஞ்சற் பாடலும் இந்த ஆலயத்திற்கு உண்டு.

பீடத்திலிருந்து 25 தேவ அங்குலங் கொண்டதும் பீடத்துடன் 31 தேவ அங்குலம் உடையதுமான கருங்கல் விக்கிரகம் மூலமூர்த்தி யாக உளது. தினமும் ஒருவேளை பூசை நடைபெறும். இந்த ஆல யத்தின் அர்ச்சகராகப் பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயர் தியாகராசக் குருக்கள் அவர்கள் பணிபுரிகின்றார்கள்.

தகவல்: ஆசிரியர் செல்வி ஜெ. சபாரத்தினம்

உ
சிவமயம்

# தம்பையப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயம்

தெல்லிப்பளை கிழக்கில் உள்ளது இந்த ஆலயம். தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து தெற்குநோக்கி ஒரு 400 மீற்றர் செல்ல இப்போதுள்ள உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு வடக்கெல்லையிற் கிழக்குநோக்கிச் செல்லும் கிளவ்லேன் என்னும் ஒழுங்கை வழி செல்லும்போது புகையிரதப் பாதையைக் குறுக்கே கடக்க நேரும். அவ்விடத்து, புகையிரத வழியிலே தெற்குநோக்கி 200 மீற்றர் செல்ல இந்த ஆலயத்தைக் கண்டுகொள்ளலாம். சுமார் 90 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்த ஆலயப் பகுதி தெல்லிப்பளைக் கிராமசேவையாளர் பிரிவில் உள்ளது. இரண்டு மண்டபங்களைக் கொண்ட புதிய கட்டிடம் 1986இல் நிறைவாயது. கிழக்கு நோக்கிய இவ்வாலயம் பேய்ச்சி அம்பாள் ஆலயமாகவிருந்து 1983இல் முத்துமாரியம்பாள் ஆயது.

பலாமரத்தடியில் வணக்கம் ஆரம்பமாயது. கர்ப்பக்கிருகத்தில் அம்பாள் படமும் வேலும் உண்டு. வீரபத்திரரும் தாபிக்கப்பட்டுள்ளார். யந்திரத்தகடொன்றும் காணப்படுகின்றது. கர்ப்பக்கிருகம் 1981இற் கட்டப்பட்டது. வழிபடுபவர்களுள் ஒருவராய திரு. நடுவிலான் மாதன் அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார். திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறும். இந்த ஆலயத்தில் நிலவிய பலி கொடுக்கும் முறைமை 1983இல் நிறுத்தப்பட்டது.

தகவல் : **நடுவிலான் மாதன்**

---

உ
சிவமயம்

# சித்தியம்புளியடி பேய்ச்சி அம்பாள் ஆலயம்

மல்லாகம் சந்தியிலிருந்து கட்டுவன் நோக்கிச் செல்லும் வீதியில் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வீதியின் மேற்குப்புறமாகவுள்ள சித்தியம்புளியடி சுடலை வைரவர் வீதிவழி மேற்கே செல்லச் சித்தியம்புளியடி அண்ணமார் ஆலயத்தை அடைய முடியும். பின்னரும் மேற்கு நோக்கிச் சென்று வடக்கே திரும்பிச் சிறிது தூரம் சென்றபின் கிழக்குநோக்கிச் செல்ல இந்த ஆலய இடத்தை அடையலாம்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டை உடையதென்று கருதப்படும் இந்த ஆலயத்திற்கு 1986இல் புதிய கட்டடம் கட்டப்பட்டது. கொன்றை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட இந்த ஆலயத்தின் மூலமூர்த்தியாக அம்பாள் படம் உண்டு. பக்கலில் ஒரு சூலமும் காணப்படுகின்றது. கட்டடம் இரண்டு மண்டபங்களை உடையது. ஒரு பரப்பு நிலத்தைப் பொதுச் சொத்தாக உடைய இந்த ஆலயத்து அர்ச்சகரான திரு. ஐயம்பிள்ளை விக்கினேஸ்வரன் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களிற் பூசை செய்கின்றார். முகாமை பொதுவானது.

தகவல் : **சடையர் ஐயம்பிள்ளை**

உ
சிவமயம்

# தெல்லிப்பழை கிழக்கு காளி அம்பாள் ஆலயம்

தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து யாழ்நகர் நோக்கிச் செல்லும் வீதியின் மேற்குப்புறமாக 600 மீற்றர் தொலைவில் உள்ள தெல்லிப்பழை வயலிருப்பைப்பதி (ஆலடி) அருள்மிகு ஞானவயிரவர் ஆலயத்திற்குத் தெற்கே 100 மீற்றர் தூரத்தில் மேற்குநோக்கிச் செல்லும் பாதையில் உள்ள சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு வடக்கெல்லையில் காளி அம்பாள் ஆலயம் உண்டு. துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது இந்த இடம்.

190 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆலயம் ஆரம்பத்தில் ஓலைக் கொட்டிலாக இருந்தது. 1957இல் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு 1963இல் கும்பாபிஷேகம் நடந்ததாகச் சொல்கின்றனர். மேலும் புனரமைப்புச் செய்து 1988-09-16 வெள்ளிக்கிழமை அஷ்டபந்தன கும்பாபிஷேகம் அளவெட்டி பிரம்மஸ்ரீ இராமலிங்கையர் விக்கினேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. தினமும் ஒருவேளைப் பூசை நடைபெறும் இந்த ஆலயத்தின் அர்ச்சகர் தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ சரவணபவ ஐயர் செல்வக்குமார சர்மா அவர்கள்.

ஆலய மூலமூர்த்தி காளியம்பாள் சாதாரண அளவையில் 21 அங்குல உயரமான கருங்கல் விக்கிரகம். பிள்ளையார், வயிரவர், நாக தம்பிரான் பரிவார மூர்த்தங்களாக உள்ளனர். ஆலய நிர்வாகம் பொதுவானது. அமைப்பு எதுவும் இல்லை. ஊஞ்சற்பாடல் ஒன்று இருந்ததென்றும் அது மறைந்துவிட்டதென்றும் சொல்கின்றனர். இந்த ஆலய உபயோகத்திற்கென ஒரு சிங்க வாகனம் செய்யும் முயற்சி உண்டு.

தகவல்: சதாசிவம் மயில்வாகனம்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்ப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய் இன்னும் எத்தனையோ யோனி பேதங்களாய் எதை எதைச் சார்கின்றதோ அது அது ஆகத் தன்னைப் பாவிக்கின்ற பாவியாகிய ஆத்மா ஒரு நாளைக்குத் தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி மெய்ச்சார்பை உணர்ந்து அதனைப் பாவிக்கும்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. க.

உ
சிவமயம்

# நாச்சிமார் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதான வழியில் தெற்கு நோக்கிச் சுமார் 400 மீற்றர் தூரம் செல்ல ஒரு சிறிய ஒழுங்கை "கிளவ் லேன்" கிழக்கு நோக்கிச் செல்கின்றது. அந்த ஒழுங்கையில் சுமார் 200 மீற்றர்வரை செல்ல வீதியின் தென்புறத்தில் நாச்சிமார் ஆலயத்தைக் காணமுடியும். தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது இப்பகுதி.

ஆதியில் ஒரு தேக்கு மரத்தின்கீழ் சின்னக்குட்டி என்பவர் வழிபட்டிருக்கின்றார். பின்னர் சிறியதொரு கொட்டில் அமைக்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டையுடைய இந்த ஆலயத்தை 1954ஆம் ஆண்டு ஆகம முறைப்படி கட்டி ஆவணிமாதச் சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்தார்கள். மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ ஐயாசாமிக் குருக்கள் பிரதம குருவாகப் பணிபுரிந்தார்கள். பின்னர் 1975இல் ஒரு இரவு நேரத்திலேயே புனரமைப்புச் செய்து ஐப்பசி 31ஆம் தேதி மாவை பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. தெல்லிப்பளை பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்கள் சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் தினமும் ஒருகாலப் பூசை செய்து வருகின்றார்கள்.

மூன்று மண்டபங்களைக் கொண்ட இந்த ஆலயத்தில் நந்தி, பலிபீடம், மணிக்கூண்டுக் கோபுரம், கர்ப்பக்கிருகம் உண்டு. பரிவார மூர்த்தியாகிய விநாயகர் அர்த்தமண்டபத்தில் உள்ளார். மூலமூர்த்தி கருங்கல்லாலாய அம்பாள் விக்கிரகம். கும்பாபிஷேக தினம் வைகாசி விசாகம். மார்கழித் திருவாதிரை சிறப்பு விழாவாக நடைபெறுகின்றது.

1985-12-17இல் இவ்வாலயத்திற்கென திரு. வ. நவரத்தினம் அவர்கள் தலைமையில் ஒரு பரிபாலன சபை நிறுவப்பட்டுள்ளது.

தகவல்: க. சதாசிவம்

திருக்கோயிலிலே காலந்தோறும் பூசை முதலியவை தவறாமல் விதிப்படி செய்யப்படல் வேண்டும். சைவ சமயிகள் நாடோறும் திருக்கோயிலிற் சென்று சிரத்தையோடு விதிப்படி சிவதரிசனம் செய்து திரும்பல் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ

சிவமயம்

# கிளானை கண்ணகை அம்பாள் ஆலயம்

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையின் தென்மேற்கில் தெல்லிப்பளை கட்டுவன் வீதியிலிருந்து தெற்குநோக்கிச் செல்லும் ஒழுங்கை மூலம் 850 மீற்றர் தூரம்வரை செல்லக் கண்ணகை அம்பாள் ஆலயத்தைச் சென்றடைய முடியும். கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் இந்த ஆலயத்தின் கிழக்குத் திசையில் உள்ளது. தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது இவ்வாலயம்.

1943ஆம் ஆண்டு திருமதி கதிரன் சீதேவி என்பவரால் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வேப்பமரத்தின் அடியில் கல்லொன்றை வைத்து வணங்கினர்கள். சூடுவிழுந்தான் அண்ணமார் ஆலய வழிபாட்டில் இப்பகுதியினர்க்கு மனக்கசப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்ததொரு நிகழ்வு வேதனையை அளித்தது. அந்தத் துன்ப நிலையில் அம்பாள் குறிப்பிட்ட அம்மையிடத்துத் தோன்றித் தம்மை இந்த வேப்பமரத்தடியிலே தரிசிக்கலாம் என்று உணரச் செய்தார்கள். அன்று தொடக்கமாகத்தான் இந்த இடத்திலே கண்ணகை வழிபாடு தொடங்கியது.

ஆலயத்தை ஆரம்பித்து வைத்தவருடைய மகள் திருமதி பசுபதி சின்னப்பிள்ளை என்பவர் தினமுங் காலைப் பூசையைச் செய்கின்றூர். விசேட வழிபாட்டுக் காலங்களில் மல்லாகத்தைச் சேர்ந்த சிவத்திரு பாலா ஐயர் அவர்கள் அர்ச்சகராகப் பணி புரிய அழைக்கப்படுகின்றூர்கள். மூலமூர்த்தி கண்ணகையம்பாள் கருங்கல்லில் செய்யப்பட்டுள்ளது. விநாயகர், வீரபத்திரர், காளி என்னும் மூர்த்தங்களும் வேலும் பக்கங்களில் வைக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள மூன்று மண்டபங்களைக் கொண்ட கட்டிடம் 1979இல் நிறைவுசெய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. உரும்பிராய் சிவஸ்ரீ நவரத்தினக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றுள்ளன.

தகவல் : திருமதி பசுபதி சின்னப்பிள்ளை

---

உ

சிவமயம்

# கோயிற்புலம் பேய்ச்சி அம்பாள் ஆலயம்

தம்பையப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்குச் சிறிது தென்மேற்காக புகையிரதப் பாதைக்கு மேற்காக இவ்வாலயம் உண்டு. தெல்லிப்பளைக் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தது. 120 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றை உடைய இவ்வாலயத்தில் கொடுக்கப்பட்ட பலி 1983இல் நிறுத்தப்பட்டது. அணிஞ்சில் மரத்தின்கீழ் கல்லுவைத்து வழிபடுகின்றனர். பக்கலில் வேலும் உண்டு.

அர்ச்சகரும் முகாமையாளருமாகிய திரு. முருகன் கந்தன் திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை செய்கின்றூர். கட்டிடம் அமைக்கப்படாது பொதுச் சொத்தாகவுள்ள இவ்வாலயத் தலவிருட்சம் அணிஞ்சில்.

தகவல் : முருகன் கந்தன்

உ

சிவமயம்

# பற்றை அம்மன் ஆலயம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கிழக்கே 200 மீற்றர் தொலை வில் தென்புறக் வயற்பக்கம் செல்லும் ஒரு சிறிய ஒழுங்கைவழி பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர்வரை செல்லப் பெரியதொரு கொட்டகைபோல் வளர்ந்து நாலாதிசையும் காலூன்றி நிற்கும் "நறுவிலி" மரமொன்றைக் காணமுடியும். அந்த மரம் எல்லாப்புற மும் வேரூன்றி வேலியடைத்தது போன்றும் கிழக்குப்புறத்து மட்டும் ஒரு ஒருவழிப் பாதையை உடையது போன்றும் வளர்ந்துள்ளது. உள்ளே சென்றால் அம்பாள். முருகன் என்போரை மரத்தடியில் தரிசிக்க முடிகின்றது, திருமஞ்சனக்கிணறு திரு. ச. விமலநாத னுடைய உபயமாக நிறுவப்பட்டுள்ளது. திரு. பசுபதி இராசதுரை, திரு. கிருஷ்ணர் பொன்னையா என்போரது உபயமாகத் தூபியுடனான கர்ப்பக்கிருகத் திருப்பணிவேலை நடைபெறுகின்றது.

நாலு புறமும் வயல் சூழ்ந்த இந்த இடத்தில் பற்றை நடுவே இருப்பதால் பற்றை அம்மன் என வணங்கினர் போலும். பிளார்வை குமாரவேள் ஆலயம் என்றும் பிளார்வை குமரவேள் பற்றை அம்மன் ஆலயமென்றும் பலவாருகச் சொல்கின்றார்கள். பிளார்வை – நிலப் பெயர். இந்தக் கருத்தை வலியுறுக்துவதான ஒரு பாடலை கணபதி கிருஷ்ணர் என்பவர் வாய்மொழிவழி கேட்டோம்.

பிளார்வையெனும் பெயருடைய வயலி னோர்பால்
பெயர்படைத்த உனைத்தொழுத இடமொன் றுண்டு
தளராதே பலர்வந்து தாழ்ந்தெ ழுந்து
தொழுத இடந்தானுமிப்போ
உழவர்களால் அந்தஇடம் அழிந்து போச்சு
உனைவந்து தொழுதற்கு ஓரிடமு மில்லை
உமைமகவே அந்தஇடம் தோன்றச்செய்வாய்
உத்தமனே பிளார்வைவாழ் குமார வேளே.

கர்ண பரம்பரையாக வரும் இப்பாடல் மூலம் இந்த ஆலயம் முரு கப்பெருமான் ஆலயமாகலாமா என்ற ஐயம் நிகழுகின்றது. சிந்திப் பதற்குரியது.

நறுவிலி எனுந் தலவிருட்சத்தையுடைய இந்த இடத்தில் வழி பாட்டை வழிப்படுத்தி வைத்தவர் சின்னவி இராமு என்பவர். இப்போ தினமும் பூசையைச் செய்பவர்கள் இராசதுரை குமாரகுலசிங்கம், பொன்னையா ஆனந்தராசா என்போர். கோவில் முகாமை பசுபதி இராசதுரையைச் சார்ந்தது.

தகவல் : கிருஷ்ணர் பொன்னையா

உ

# சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராசர் ஆலயம்

செல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வளவில் இவ்வாலயம் உண்டு. துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச் சார்ந்தது. பாவலர் துரையப்பாபிள்ளை 1910ஆம் ஆண்டு, மகாஜனக் கல்லூரி என்னுங் கல்வி நிலையத்தை உருவாக்கிய வேளை மாணவர்களது வழிபாட்டிற்காகத் தொடங்கிய அமைப்பே இத்தகு வளர்ச்சி பெற்றது. துரையப்பா பிள்ளையின் மைந்தன் அமரர் ஜெயரத்தினம் அவர்களின் முயற்சி காரணமாக, 1910ஆம் ஆண்டு கல்லூரியின் பொன்விழா நினைவாக ஓர் அழகிய ஆலயம் பிரார்த்தனை மண்டபத்துடன் கல்லூரி வளவின் வடபகுதியில் தென்புறம் நோக்கியதாகக் கட்டப்பட்டு, 1960-10-30இல் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. மாவை பிரம்மஸ்ரீ ஐயாச்சாமிக் குருக்கள் வயித்திபநாதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம் பெற்றன. ஐம்பொன்னாலான நடராசர், சிவகாமிஅம்பாள், விநாயகர் என்போரது விக்கிரகங்கள் தாபிதமாயின. 1976-09-06இல் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் அதே குருக்களினால் நிறைவு செய்யப்பட்டது. 1985-07-04இல் மீண்டும் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இதே குருக்களின் தலைமையில் நிறைவுகண்டது.

1982ஆம் ஆண்டு மாணிக்கவாசக சுவாமிகளின் திருவுருவம் தாபிக்கப்பட்டது. நடராசப்பெருமானுக்குரிய ஆறு அபிடேகங்களும் மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி, மார்கழி என்னும் மாதங்களிற் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனி உத்தரம் மார்கழித் திருவாதிரை ஆகிய தினங்களில் சுவாமி வலம்வருவதுண்டு. சிவராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெறுவதுண்டு. தினமும் காலை எட்டுமணிக்குப் பிரம்மஸ்ரீ ஐ. வயித்தியநாதக் குருக்கள் அர்ச்சிக்கின்றார்கள்.

தகவல்: ஆசிரியர் ச. விநாயகரத்தினம்

உ

# கொல்லன்சீமா காளியம்பாள் ஆலயம்

செல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதானவீதிவழி 400 மீற்றர்வரை தெற்கு நோக்கிவந்து, இப்போதுள்ள தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு முன் மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 250 மீற்றர்வரை சென்றால் இந்தப் பழைய ஆலயத்தைக் கண்டு வழிபட முடியும். நான்கு மண்டபங்களை உடைய இந்த ஆலயம் 200 ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும். மாருதப்புரவீகவல்லி காலத்திலே தோன்றி இருக்கலாமென்ற கருத்துமுண்டு. தவண்டைக் குருக்கள் ஆசாரி என்பவர்தான் முதலிலே ஆலயத்தைக் கட்டுவித்தார். அதற்குமுன் மரத்தின் கீழ் வழிபாடு நடைபெற்றுள்ளது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட காளியம்பாள் சிலையை அப்போதே ஆலயத்தில் தாபித்திருந்தார்கள்.

19ஆம் நூற்றாண்டு வரையில் இரு கும்பாபிஷேகங்களும், 1935 வரையில் மற்றொரு கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கலாம். விபரங்களை நினைவிற்குக் கொண்டுவர முடியவில்லை. வைகாசி விசாகப்பொங்கல் மிகச்சிறப்பாக நடப்பதுண்டு. இப்போ பத்தாண்டுகளுக்கு மேலாக விழாக்கள் எதுவும் நடைபெறவில்லை. பராக்கிரமசிங்கம் பரமசாமி என்பவர் விளக்கேற்றி வருகின்றார்.

அம்பாள் சிலையுடன், விநாயகர், வயிரவர், பத்திரகாளி, வீரபத்திரர் ஆய பரிவார மூர்த்தங்களும் உண்டு. ஆலயத்திலே சிங்கவாகனம் ஒன்று இருக்கின்றது. பழனி சுப்பிரமணியம் என்பவரது முகாமைக்குரிய இந்த ஆலயம் துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

தகவல்: ஆயர்பாடி வே. த. மயில்வாகனம்

உ

சிவமயம்

# கன்னிவளவு பிள்ளையார் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து காங்கேயன் துறைப் பக்கமாகப் பிரதான வீதிவழி வடக்கு நோக்கிச் செல்லும்போது சுமார் 650 மீற்றர் தொலைவில் ஒரு மதவு வருகின்றது. அந்த இடத்திலிருந்து மேற்குநோக்கிச் செல்லும் ஒழுங்கைவழி சென்று தெற்கே திரும்ப 600 மீற்றர் தூரத்தில் எங்கள் கன்னிவளவு விநாயகனைத் தரிசிக்க முடியும்.

நூறு வருடங்கட்கு மேற்பட்ட வரலாற்றையுடைய இந்த ஆலயம் பற்றிய செய்திகளைச் சுதேச வைத்தியர் செல்லப்பா காலத்திலிருந்து தான் ஓரளவு அறிகின்றோம். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பேரர் இந்தச் செல்லப்பா என்று சொல்லப்படுகின்றது. முதலிலே ஆலமரத்தின்கீழ் ஒரு கல் வைத்து வணங்கப்பட்டது. பின்னர்தான் 1973 வரையில் கட்டடம் கட்ட ஆரம்பித்தனர். சிற்பாசாரியாராக வடமயிலை சி. செல்வரத்தினம் அவர்கள் இருந்திருக்கின்றார்கள். 1976இல் திருப்பணி வேலைகள் நிறைவாக்கப்பட்டு சித்திரைப் புனர்பூசத்தில் 1976–05–05இல் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது. உரும்பிராய் பண்டிதர் சிவஸ்ரீ நவரத்தினக் குருக்கள் தலைமையில் இக்கிரியைகள் நடைபெற்றுள்ளன. இக்கும்பாபிஷேகத் தினத்தை முதலாகக் கொண்டு 12 தினங்கள் அலங்காரத் திருவிழா இப்போதும் நடைபெறுகின்றது. மூலமூர்த்தி விநாயகர் கருங்கல் லாலானது. வயிரவர், நாகபூஷணியம்பாள், நடேசர் என்னும் பரிவார மூர்த்தங்களுடன் வேலும் உண்டு. வயிரவருக்குரிய சிறிய ஆலயம் பிரதான ஆலயத்துடன் சேர்ந்தபடி முன்புறத்தில் வடக்காக 1983–04–14இல் கட்டப்பட்டுள்ளது. நான்கு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி கார்த்திகைத்தீபம், மார்கழித் திருவாதிரை, வெள்ளிக்கிழமைகள் ஆய தினங்களில் விநாயகப்பெருமான் வீதியுலா வருவதுண்டு.

மேற்கு நோக்கிய வாயிலை உடைய ஆலயத்தின்முன் வடக்குத் தெற்காகச் செல்லும் ஒழுங்கை நிலத்தைப் பிரிக்கின்றது. ஒழுங்கையின் மேற்குப்புறத்திலும் இரண்டு பரப்பு நிலம் கோயிலுக்கென உண்டு. அந்த நிலத்திலேதான் மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பன உண்டு. யானை, எலி வாகனங்களும் உண்டு. கோயில் அர்ச்சகராகச் சிவத்திரு வெங்கடாசல ஐயர் பஞ்சலிங்க ஐயர் அவர்கள் பணி புரிகின்றார். வல்லியர் கந்தையாவைத் தலைவராகக் கொண்ட பரிபாலன சபை உண்டு. இது 1965இல் தாபிதமானது. தலவிருட்சம் ஆல்.

தகவல் : இளையவி பாலகிருஷ்ணன்
இளையவி செல்வராசா

உ
சிவமயம்

# தில்லையிட்டி விநாயகர் ஆலயம்

தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து கிழக்குத் திசையாகக் கட்டுவனை நோக்கிச் செல்லும் வீதியோரத்தில் தென்புறமாக ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவாலயத்திற்குத் தென்கிழக்காக, தில்லையிட்டி ஆலயம் அமைந்துளது. வடக்கு நோக்கிய இந்த ஆலயத்தின் தென்புறத்துள்ள – கிணற்றை முன்னொருமுறை மக்கள் வற்ற இறைத்துத் தூய்மை செய்தனர். அவ்வேளை கிணற்றுட் கண்டெடுக்கப்பட்ட விநாயக விக்கிரகமே இன்று ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தை அலங்கரிக்கின்றது. கிணற்றினுள் ஊனமுடைய மற்றொரு விநாயக விக்கிரகம் இப்போதும் உண்டு. ஆலயத் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்த இந்தக் கருங்கல் விக்கிரகம் எந்தவித சிதைவுமின்றி நிறைந்த பொலிவுடனும் எழிலுடனுங் காணப்படுவது எமக்குப் பேரானந்தத்தைத் தருகின்றது. செவிவழிச் செய்தியாய இதற்குக் காலங் குறிப்பிட முடியவில்லை. ஸ்ரீ மகாமாரி அம்பாள் காலத்துடன் இதன்காலமும் ஒன்றியது எனலாம்.

வடக்கு நோக்கிய நான்கு மண்டபங்களைக் கொண்ட இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் 1984 இல் நடைபெற்றுள்ளது. நவாலியூரைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமைக் குருக்களாகவிருந்துள்ளார். இதற்குமுன் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இந்த ஆலய விநாயகருக்குப் பூசை நிறைவாகிய பின்னர்தான் ஸ்ரீ மகாமாரி அம்பாள் பூசை சில ஆண்டுகளாக நடைபெற்றுவந்தது: அம்பாள் ஆலயத்தில் பரிவார தெய்வமாக விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்ட பின்னர் இந்த முறைமை மாறிவிட்டது.

தினமும் ஒரு நேரப்பூசைமட்டும் நடைபெறும் இந்த ஆலயத்தில் விநாயகசதுர்த்தி (ஆவணிச்சதுர்த்தி) மட்டும் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஊஞ்சற்பாட்டு இதற்கென செய்யப்படவில்லை. ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய நில உறுதிப்பாட்டுக்குரிய கருத்துக்கள் இந்த ஆலயத்திற்கும் பொருந்துவன. ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்கள் திருச்செந்திநாத சர்மா அவர்களே நிர்வாகப் பொறுப்பையும் ஏற்று நடாத்துகின்றார்கள். கோயில் முகாமை பொதுவானது.

தகவல்: பிரம்மஸ்ரீ ச. செந்திநாதக் குருக்கள்

ஸ்ரீ விநாயகப் பெருமானுக்காய முதற்கட்டிடத்தை நாராயண பிள்ளை என்பவர் அமைத்துள்ளார். இரண்டாவது முறையாக 1934இல் கைலாயபிள்ளை சின்னத்தம்பி என்பவர் அமைத்துள்ளார். இப்போதுள்ள நான்கு மண்டபங்களைக் கொண்ட கட்டிடம் 1984இல் நிறைவாயது.

தகவல்: திருமதி சின்னத்தம்பி பாக்கியம்

உ

## வீமன்காமம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

தெல்லிப்பளை தில்லையிட்டி மகாமாரி அம்பாள் ஆலயத்தின் கிழக்குப்புறத்தில் தெல்லிப்பளை கட்டுவன் பிரதான வீதியிலிருந்து வடக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் ''டச்'' வீதியில் 800 மீற்றர் வரை சென்று கிழக்கு நோக்கி 150 மீற்றர் தூரம் வரை செல்ல இந்த விநாயகர் ஆலயத்தைப் பார்க்கமுடியும்.

நூற்றைம்பது ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றை உடைய இந்த ஆலயத்தின் சரியான வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நான்கு மண்டபங்களையுடைய இவ்வாலய கும்பாபிஷேக காலம் தெரியவில்லை. பிரதம குருவாக மாவை பிரம்மஸ்ரீ ஐயாச்சாமிக் குருக்கள் வைத்தியநாதக் குருக்கள் இருந்திருக்கின்றார்.

கோயில் அர்ச்சகராகப் பணிபுரியும் தெல்லியூர் பிரம்மஸ்ரீ கந்தசாமி சர்மா மோகன சர்மா தினமும் இருவேளை பூசை செய்கின்றார். மூலமூர்த்தியாக கருங்கல்லால் ஆன விநாயகர் விக்கிரகம் உண்டு. பரிவாரமூர்த்தங்கள் எதுவும் இல்லை. இவ்வால யத்தில் மூஷிகம், பலிபீடம், மணிக்கூட்டுக் கோபுரம், எலிவாகனம் ஆகியன உண்டு.

ஆவணி ரேவதியை தொடக்கமாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்கார உற் சவம் நடைபெறுவதுண்டு. ஆவணிச்சதுர்த்தி, மார்கழித்திருவாதிரை, பிள்ளையார் கதை என்பன பிரதான விழாக்களாக நடைபெறுவதுண்டு. ''கருதரிய பொருள் மறைகள் கால்களாக'' என்னுந் தொடக்கத்தையுடைய ஊஞ்சற்பாடலும் உண்டு.

நிலம் திருமதி கார்த்திகேசு தங்கப்பிள்ளையினுடையது. ஆலய பரிபாலனம் 1988 இலிருந்து தொண்டர் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. நிலம் தெல்லிப்பளைக் கிராம சேவையாளர் பிரிவைச் சார்ந்தது.

தகவல்: நமசிவாயம் சரவணமுத்து

உ

## அரசனலடி விநாயகர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதானவீதிவழி 375 மீற்றர் வரை தெற்கு நோக்கிச் செல்ல வீதிமருங்கே மேற்குப்புறமாக இந்த ஆலயம் தரிசனைக்குரியதாகும். 100 ஆண்டுக்கு முற்பட்ட இந்த ஆலய முதற்கட்டடத்தை இராமர் பொன்னர் என்பவர் கட்டுவித்தார். அன்று தாபிதம் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் இன்றும் உண்டு.

1962ஆம் ஆண்டு கோயில் புனரமைப்பு வேலை நிகழ்ந்து 1963 தை சதயத்தில் மாவை பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள் சண்முகநாதக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நிறைவாகியது. மூலமூர்த்தி விநாயகர் கருங்கல் விக்கிரகம். 24 தேவ அங்குல அளவுடையது. வயிரவர், நாகதம்பிரான் என்னும் பரிவார மூர்த்தங்களும் உள. மூஷிகம், பலிபீடம் என்பனவும், மணிக்கூண்டுக் கோபுரமும் உண்டு. ஊஞ்சற் பாடலும் உண்டு என அறிந்தோம் நான்கு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தில் ஒருவேளை மட்டும் பூசை நடைபெறுகின்றது. சதுர்த்தித்திதிகளிலும் வெள்ளிக் கிழமைகளிலும் விசேட மாலை வழிபாடு உண்டு. தைச்சதயம், ஆவணிச்சதுர்த்தி, என்னும் தினங்களில் திருவிழா நடைபெறுவதுண்டு. கோயில் அர்ச்சகராகப் பிரம்மஸ்ரீ விஸ்வநாத ஐயர் நாராயண சர்மா பணிபுரிகின்றார்கள். முகாமை திருமதி விநாயகமூர்த்தி சிவகெங்கைமூர்த்திக்குரியது. கிழக்கு நோக்கியது இந்த ஆலயம்.

தகவல்: திருமதி வி. சிவகெங்கைமூர்த்தி

உ

# தரைமன் கலட்டி விநாயகர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதான வீதிவழி யாழ்நகர் நோக்கிச் செல்கையில் சுமார் 600 மீற்றர் தொலைவில் யானைக்குட்டி ஒழுங்கை என்னும் பெயருடைய கிழக்கே செல்லும் பாதையூடாக சுமார் 500 மீற்றர் வரை செல்லத் தரைமன்கலட்டி விநாயகனைக் கண்டானந்திக்கலாம். இதனைத் தலைமன்கலட்டி விநாயகர் என்றும் தலைவன் கலட்டி விநாயகர் என்றும் சொல்வர். தெல்லிப்பளை கிராமசேவகர் பிரிவைச் சார்ந்த இந்த நிலத்திற்கு தரைமன்கலட்டி என்பது பெயர்.

இந்த ஆலயம் உள்ள நிலம் தெல்லியூர் பரராசசிங்கம் வன்னிச்சட்டம்பியார் என்பவருக்குரியது. வன்னிச்சட்டம்பியார்தான் இந்த இடத்தில் விநாயகர் ஆலயத்தை ஆரம்பித்து வைத்தவர். அவர் சிந்தனையில் மற்றொரு கருத்து இருந்திருக்கின்றது. எதிர்காலச்சந்ததி பற்றியது. அதாவது இந்த ஆலய அமைப்பை ஆதாரமாக வைத்து ஒரு பாடசாலையை நிறுவவேண்டுமென்பது. ஆகவே விநாயகருக்கான ஆலயத்தை சிறிதாக வைத்துக்கொண்டு கல்வியபிவிருத்திக்கான நிறுவனத்தில் கண்ணோட்டம் செலுத்த விரும்பினார். இந்தவேளை சட்டம்பியாருக்கு ஆலோசகர்களாக சுவாமிநாதர் செல்லப்பா, விஸ்வநாதர் சின்னப்பா என்பவர்கள் கிடைத்தனர். பாடசாலையை இந்த இடத்தில் அமைப்பதை அவர்கள் விரும்பவில்லை. இந்த இடத்தில் கோயிலை விஸ்தரிக்கலாம் என்றும் பாடசாலையைத் தெல்லிப்பளைச் சந்திக் கண்மையாக ஆரம்பிக்கலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஆலோசகர்கள் இருவரும் பொருள்நல முடையவர்களாக இருந்தமையால் அவர்கள் கருத்து நடைமுறைக்கு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டு, [1]சைவாங்கிலப் பாடசாலையும் தொடங்கியது.

மூவரது பொருளுதவியாலும் விநாயகருக்கு கிழக்கு நோக்கிய ஆலயம் உருவாகியது. இது தொடர்பாக நடைபெற்ற முதலாவது கும்பாபிஷேகம் பற்றிய விபரம் தெரியவில்லை. பின்னர் கட்டடங்கள் பிரித்துக் கட்டப்பட்டு 1953இல் இரண்டாவது கும்பாபிஷேகம் நடந்துள்ளது. பின்னர் புனரமைக்க வேண்டிய நிலையில் 1976–08–27இல் புதிய அமைப்பிற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. திருப்பணிகள் நிறைவாகி 1977இல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

மூலமூர்த்தி விநாயகர் கருங்கல் விக்கிரகம். நாகதம்பிரான், வயிரவர் – பரிவாரமூர்த்தங்கள். நான்கு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தில் மணிக்கூண்டுக்கோபுரமும் யானைவாகனம் ஒன்றும் உண்டு. எழுந்தருளியும் அதற்கண்மையில் முன்பிருந்த விக்கிரகமும் மூன்றுவது மண்டபத்தில் உள்ளன. தினமும் ஒரு காலப்பூசையை விழிசிட்டியைச் சேர்ந்த சிவஸ்ரீ கந்தசாமி ஐயர் மூர்த்திக் குருக்கள் செய்து வருகின்றார். ஆவணிச் சதுர்த்தி, மார்கழித் திருவாதிரை என்னும் தினங்களில் சுவாமி வீதியுலா வருவதுண்டு.

தகவல்: **திருமதி விஜயரட்ணம் தங்கம்மா**

*1. காங்கேயன் கல்விமலர் – 1985 – பக்கம் 2.*

உ

சிவமயம்

# குருக்கள்கிணற்றடி விநாயகர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதானவீதிவழி யாழ்நகர் நோக்கி ஸ்ரீ துர்க்கை அம்பாள்ஆலய வாயிலைக் கடந்து செல்கையில் மேற்குநோக்கி ஒரு வீதி பிரிந்து செல்கின்றது. அந்த வீதியில் சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் கருணைமழை பொழியும் குருக்கள் கிணற்றடிக் கணபதியைச் சரணடைந்து ஆறுதல் பெறலாம். துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது இந்த இடம். [1]தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய மூன்று ஊர்கள் சங்கமமாகின்ற இடம்தான் இது என்ற கருத்து பலருக்குண்டு. அந்த இடத்தில் ஆல், அரசு, வேம்பு என்னும் மூன்று மரங்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வானளாவி வளர்ந்து நிற்கின்றன. இற்றைக்கு 600 ஆண்டுகட்கு முன் அரசர் குலத்திலே தோன்றிய சம்பந்தஞானியார் துறவு பூண்டு இந்த மரங்களின்கீழ் இருந்து தான் சமாதியாயினர் என்ற கருத்தையும் அறிகின்றோம். 1348 முதல் 1371 வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஞானசம்பந்தனுக்கும் இத்துறவிக்கும் சம்பந்தம் இருக்கலாமென்ற ஐயம் உண்டு. துறவியார் சமாதியடைந்த இடத்தில் அவருக்கு தண்ணிழல் தந்த மரங்கள் இன்று தலவிருட்சங்களாய் உள்ளன. அத்துடன் வயிரவப் பெருமானுக்குரிய கோயிலாக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றது.

1978இல் நடைபெற்ற கும்பாபிஷேக நினைவாக வெளியாகிய மலரில் ஆசிரியர் கருத்து என்ற பகுதியில் இந்த ஆலயம் அமைந்துள்ள இடம் அளவெட்டி என்று குறிப்பிடப் பட்டுள்ளது. தலைவர் உரை என்ற கட்டுரையில் அளவெட்டி தெல்லிப்பளை என்னும் கிராமங்களின் மத்தியில் என்று காட்டப்பட்டுள்ளது. உபதலைவர் உரையாலும் தலைவர் உரை வலியுறுத்தப்படுகின்றது. ஆலயவரலாறு அளவெட்டி, தெல்லிப்பளை என்பவற்றுடன் மல்லாகம் என்னும் கிராமத்தையும் சேர்த்துக்கொள்கின்றது. திருவூஞ்சற்பாடல் தெல்லிப்பளையை மட்டும் சுட்டுகின்றது. சூழலில் உள்ள மக்கள் தெல்லிப்பளையைச் சேர்ந்த இடம்தான் என்றுர்கள். சிந்தனைக்குரியது,

[2]சைவக் குருக்கள் ஒருவர் தமது குடியிருப்புத் தேவைக்கெனக் கிணறு ஒன்றைத் தோண்டுவித்தார். அந்தவேளை கண்டெடுக்கப்பட்டதே இந்த விநாயகர் சிலை. மிக அரிதாகவும், பெரிதாகவும், அழகானதாகவும் கிடைத்த அந்த விநாயகருக்குக் கிணற்றடிக்கருகே ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர், அதனுற் குருக்கள்கிணற்றடி விநாயகர் என்ற பெயர் நிலவுவதாயிற்று. முன்பு பல்லாண்டுகள் இந்த இடத்திலிருந்த ஆலயத்து விக்கிரகம் அந்நியரின் தாக்கத்தினின்றும் பாதுகாக்கப்படுவதற்காகக் கிணற்றுள் பத்திரமாக வைத்து மூடப்பட்டிருக்கலாம். பின்னர் அது கிடைத்திருக்கலாம் என்று சிந்திக்க இடமுண்டு. 1845ஆம் ஆண்டு யாழ் கச்சேரியில்

1. குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம் கும்பாபிஷேகமலர் 28-06-1978 முதற் கட்டுரை.

2. இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சு - 1984 பக். 97

இருந்த ஆலயங்களின் பதிவேட்டில் இந்த ஆலயத்தின் பெயரும் இருந்திருக்கின்றது.[3]

பழைய கோயிற்கட்டடம் பழுதடையத் தொடங்கியது. 1000ஆம் ஆண்டளவில் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணிவேலை தொடங்கப்பட்டது. அவ்வேளை பிரசித்திபெற்ற பரியாரி காசிப்பிள்ளையின் ஊக்கத்தால் திருப்பணி வேலை துரிதப்படுத்தப்பட்டது. இடையே அவர் மறைய அவரது மைத்துனர் கந்தப்பர் சுப்பிரமணியம் மிகுதி வேலைகளை நிறைவுசெய்தார். 1910ஆம் ஆண்டு ஆனி மாதம் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1920இல் தேர் கட்டுவிக்கப்பட்டது. 1918இல் இடம் பெற்ற வெள்ளப் பெருக்கின்போது புகலிடம் அளித்த விநாயகரின் கருணையை வியக்கின்றோம். நீண்டகாலமாகக் கட்டடங்கள் பழுதுபார்க்கப் படாது இருந்தமையால் மீண்டும் பழுதடையத் தொடங்கின. 1973ஆம் ஆண்டு சுவாமி பாலஸ்தாபனம் ஆகியது. வேலைகள் முக்கியமான பகுதிகள் நிறைவாகி 1978-06-26இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது,

மூலமூர்த்தி விநாயகர் கருங்கல்லாலாயது. வெள்ளி அங்கி உண்டு. கஜலட்சுமி, சுப்பிரமணியர், நடராசர், வயிரவர் என்னும் மூர்த்தங்களுக்குரிய கோயில்களும் உண்டு. கோயிலுக்கென ஒரு மடமும் தெற்குப்புறத்தில் உள்ளது. எலிவாகனம், மயில்வாகனம் என்பனவும் உண்டு. உள் வீ தி, வெளிவீதியென இரண்டு வீதிகளைக்கொண்ட இந்த ஆலயத்திற்கு 35 பரப்புவரை நிலம் உண்டு. வயல் நிலமாக 15 பரப்புவரை உண்டு. கோயில் அர்ச்சகராக சிவஸ்ரீ வை. நடராச சர்மா பணிபுரிகின்றார்கள். ஆலய பரிபாலனத்தைக் கவனிக்கவென நிர்வாக சபை உண்டு. 7 மண்டபங்களைக்கொண்ட இந்த ஆலயத்தில் 3 காலப்பூசை தினமும் நடைபெறுகின்றது. மகோற்சவம் ஆடி உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பமாகும். 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். விநாயகர் சஷ்டி, விநாயகர் சதுர்த்தி. விஜயதசமி, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி என்னும் காலங்களில் விசேட திருவிழா நடைபெறும். விழிசிட்டிப் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் ஆக்கிய "திருமருவும் யாழ்ப்பாண நாட்டின் மேலாத் தெல்லிநகர்" என்று தொடங்கும் திருவூஞ்சற் பாடலும் ஆலயத்திற்குண்டு. இது கிழக்கு நோக்கியதாக அமைந்துள்ளது.

தகவல்: கந்தையா

---

3. யாழ். பிரதேச இந்து ஆலயப்பதிவு – 1845 கச்சேரி, யாழ்ப்பாணம்.

---

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் சிவபெருமானை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ

சிவமயம்

# கருணைமிகு காசி விநாயகர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதான வீதிவழி யாழ்நகர் நோக்கிச் செல்கையில் சுமார் 800 மீற்றர் தொலைவில் வீதியின் கிழக்குப்புறத்தே மேற்கு நோக்கிய வண்ணம் தோன்றுவதுதான் பழம்பெருமை பேசும் காசிவிநாயகர் ஆலயம். காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்ட காரணத்தால் வந்த பெயர்தான் அதுவென அறிகின்றோம். தெல்லிப்பளைக் கிராமசேவையாளர் பகுதியைச் சேர்ந்த இந்த நிலத்தின் பெயர் வீணாக்கடவை என்பதால் வீணாக்கடவை கருணைமிகு காசிவிநாயகர் என்றுஞ் சொல்வர்.

[1]தலயாத்திரை சென்ற பெண்மணி ஒருவர் திரும்பி வரும்போது காசியிலிருந்து விநாயகப்பெருமான் விக்கிரகம் ஒன்றினைத் தம்முடன் கொண்டுவந்து வீணாக்கடவை என்று அழைக்கப்படும் இப்பகுதியில் வைத்து முப்போதும் பூசனை செய்து வந்தார். [2]அந்த இடத்தில் மரமொன்று வளர்ந்து பாரித்து நிழல் பரப்பி நின்றது. அதன் வளர்ச்சி, வனப்பு என்பவற்றை ஆராயப்புகுந்து வியந்து நின்றவர் பலர். இந்த மரத்தின் அற்புதத்தை அறியாத – மதுவிற்கு அடிமையான – ஒரு தூர்த்தன் தீண்டிவிட்டான். அந்தளவில் – யாரும் அறியாத வகை வளர்ந்த அந்த மரம் யாரும் அறியா வகை மறைந்துவிட்டது. அந்த அதிசய மரத்தைப் பார்க்கும் பேறு எமக்கு இல்லை.

150 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினையுடைய இந்த ஆலய வழிபாடு முதலில் ஒரு மரத்தின்கீழ் ஆரம்பமாயது. பின்னர் கட்டடங்கள் கட்டப்பட்டு முதல் இரண்டுமுறை கும்பாபிஷேகம் நடைபெற்றமை பற்றிய விபரம் எதனையும் கண்டுகொள்ள முடியவில்லை. [3]இரண்டாவது கும்பாபிஷேகத்தின்பின் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக வழிபடுவோர் கவனம் குன்றி இருண்டதொரு காலபகுதியாயது. அதனால் பழைய வரலாறுகளைத் தெளிவாகக் கண்டு கொள்ள முடியவில்லை. மூன்றாவது கும்பாபிஷேகம் 1971-09-15இல் பூச நட்சத்திரத்தில் நயினை சிவஸ்ரீ ஐ. கயிலாயநாதக் குருக்கள் தலைமையில் நிறைவு கண்டது. இந்த வேளை மூலமூர்த்தி விநாயகர் 40 தேவாங்குல உயரமுடையதாகப் பிரதிட்டை செய்யப்பட்டதுடன் முன்பிருந்த காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட உரு மகாமண்டபத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இந்த உருவம் சிவலிங்கத்தின் ஆவுடையார் பகுதிக்கு மேற்பட்டதுபோன்று காணப்படுகின்றது. அதனால் இதனை சுயம்புலிங்கம் என்று கோயிற் குருக்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். இலிங்கம் போன்று காணப்பட்டாலும் விநாயகர் என்ற சிந்தனையோடேயே மக்கள் வழிபட்டனர். 1973-04-19இல் கொடித்தம்பம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து மகோற்சவம் நடைபெறலாயிற்று. இந்த வைபவத்தையும் சிவஸ்ரீ கயிலாயநாதக்

---

1. இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சு — 1984 பக்கம் 95.
2. தெல்லிப்பளை வீணாக்கடவை காசிவிநாயகர் தேவஸ்தானம் - வரலாறு, பதிகம், ஊஞ்சல் — 1971 பக்கம் 03.
3. தெல்லிப்பளை வீணாக்கடவை காசிவிநாயகர் தேவஸ்தானம் - வரலாறு, பதிகம், ஊஞ்சல் 1971 பக்கம் 04.

குருக்கள் அவர்களே சிறப்புற நடாத்தி வைத்தார்கள். 1987-06-03 புதன் கிழமை மக நட்சத்திரத்தில் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் ஆலய பிரதானகுரு சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

விஜயதசமி, மார்கழித் திருவாதிரை, விநாயகர் சஷ்டி, விநாயகர் சதுர்த்தி, தைப் பொங்கல், தைப் பூசம் ஆகிய தினங்களிலும் சுவாமி வீதியுலா வந்து அருள் பாலிக்கும் உற்சவம் நடைபெறுவதுண்டு.

மகாவிஷ்ணு, நாகதம்பிரான், வயிரவர், சண்டேசுரர், ஸ்தம்பப் பிள்ளையார் முதலிய மூர்த்தங்களுடன் எழுந்தருளி இரண்டும், மூஷிகம், பலிபீடம் என்பனவும் உண்டு. மணிக்கூண்டுக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. தனிக் குதிரை, இரட்டைக் குதிரை, யானை, எலி முதலிய வாகனங்களும் அடியார்களால் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

கோயிற் திருப்பணி வேலைகள் தொடருகின்றன. இரண்டு வீதிகளைக் கொண்ட இந்த ஆலயத்தின் உள்வீதிக்குக் கூரைபோடும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 7 மண்டபங்களையுடைய ஆலயத்தின் வடக்குப் புறத்தில் நீண்டதொரு மண்டப அமைப்புத் தெரிகின்றது. இங்கே சமயபாட வகுப்புக்கள், இசைக் கலைப் பயிற்சி வகுப்புக்கள், மிருதங்க வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இந்த இலவச வகுப்புக்களை பாலர் ஞானோதய சபா என்ற மன்றம் பரிபாலிக்கின்றது. பாலர் ஞானோதய சபா தேவஸ்தான அனுசரணையுடனேயே நடைபெறுகின்றது. ஆலயக் குரு சிவஸ்ரீ கணேசலிங்கக் குருக்கள் அவர்களே சபையின் இன்றைய தலைவராகவுமுள்ளார். மூன்றுகாலப் பூசை நடைபெறும். இந்த ஆலய அர்ச்சகராகவும் சிவஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள் கணேசலிங்கக் குருக்கள் அவர்களே பணிபுரிகின்றார்கள். முகாமை தெல்லிப்பளை பூதத்தம்பி முருகையா ஆசிரியர் அவர்களைச் சார்ந்தது. வயாவிளானைச் சேர்ந்த திரு. சி. நல்லதம்பி என்பவர் "சீராரும் தெல்லிநகர் சேரும் வீணுக்கடவை" என்று தொடங்கும் வெண்பாவை யுடைய பதிகமொன்றை ஸ்ரீ காசிவிநாயகர் மீது பாடியுள்ளார்கள். "நாரணனு நான்முகனு நாடிக் காணு" என்னும் முதலையுடைய திருவூஞ்சற் பாடலை, தெல்லியூர் திருமதி க. சிவானந்தவல்லி அவர்கள் பாடியுள்ளார்கள். இந்த ஆலயத்தில் பாலர் ஞானோதய சபையால் வெளியிடப்பட்ட நூல்கள்:

1. கூட்டுப் பிரார்த்தனைத் தோத்திரத் திரட்டு — 1962
2. பிரம்மஸ்ரீ மு. சிவகடாட்சக் குருக்கள் நினைவுமலர் — 1970
3. பாலர் ஞானோதய சபை வெள்ளிவிழா மலர் — 1972
4. காசிவிநாயகர் தேவஸ்தானம் வரலாறு, பதிகம், ஊஞ்சல் — 1972
5. கூட்டுப் பிரார்த்தனைத் தோத்திரத் திரட்டு — 1973
6. திருவாதவூரடிகள் வரலாற்றுச் சுருக்கம் — 1985
7. பெரியபுராண வசனச் சுருக்கம் — 1985
8. திருத்தொண்டர் புராணம் வினாவிடை — 1986
9. பத்துக் கட்டுரைகள் — 1987
10. விநாயக மகத்துவம் — 1987

தகவல்: பிரதமகுரு சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்

# முல்லாத்தனை சித்திவிநாயகர் ஆலயம்

தெல்லிப்பளைப் புகையிரத நிலையத்திற்குப் பக்கலிலுள்ள ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் பின்புறமாக வடக்கு நோக்கிச் செல்லும் ''டச்'' வீதியில் ஒரு 75 மீற்றர் வடக்கே செல்ல ஒரு சிறிய ஒழுங்கை கிழக்கு நோக்கிச் செல்கின்றது, அந்த ஒழுங்கையில் 25 மீற்றர் தூரத்தில் முல்லாத்தனை விநாயகர் ஆலயத்தைத் தரிசிக்க முடிகின்றது. இந்த இடம் தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது. காசியிலிருந்து சிதம்பரநாதன் கனகசுந்தரம் என்பவராற் கொண்டுவரப்பட்ட கருங்கல்லால் ஆன விநாயகர் விக்கிரகம் கர்ப்பக்கிருகத்தை அலங்கரிக்கின்றது. மூன்று மண்டபங்களைக் கொண்டது இவ்ஆலயம்.

தினமும் ஒருவேளைப்பூசை நடைபெறுகின்றது. கோயில் நிர்வாகத்தை, இருபத்தைந்து பேரைக் கொண்ட பரிபாலன சபை நடைமுறைப்படுத்துகின்றது. திரு. தங்கவேலு அவர்கள் அச்சபையின் தலைவர். பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்கள் கருணாகர சர்மா அவர்கள் கோயில் அர்ச்சகராகப் பணிபுரிகின்றார்கள். வடக்கு நோக்கிய இந்த ஆலயத்தில் கடைசியாக 1956இல் கும்பாபிஷேகம் நடந்ததாகச் சொல்கின்றார்கள். பொங்கல், ஆவணிச்சதுர்த்தி, சித்திராபூரணை என்பன விசேடமாக நடைபெறுகின்றன.

தகவல்: **திருமதி பராசக்தி பரமேஸ்வரன்**

உ

# அரசினர் மாவட்ட வைத்தியசாலை முருகன் ஆலயம்

தெல்லிப்பளை அரசினர் மாவட்ட வைத்தியசாலை வளவில் இந்த முருகன் ஆலயத்தைக் கண்டுகொள்ளலாம். தங்கியுள்ள நோயாளர்கள் வழிபடுவதற்கென வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு சபை அமைக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் முருகன் ஆலயம் கட்டுவதற்கென அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலய கட்டட வேலைகளை மயிலிட்டியைச் சேர்ந்த ஸ்தபதி செல்வராசா அவர்கள் நிறைவு செய்தார்கள். தூபியில் வைக்கப்பெற்ற உருவங்களை அளவெட்டி ஸ்தபதி முருகையா அவர்கள் அழகுற அமைத்தார்கள், 1976-06-13 வெள்ளிக்கிழமை வைகாசிப் பூச நட்சத்திரத்தில் சிவ ஸ்ரீ ஐயாச்சாமிக் குருக்கள், வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. மூலமூர்த்தி ஐம்பொன்னாலான வேல். பரிவார மூர்த்தமாக ஐம்பொன்னாலான விநாயகமூர்த்தியினைப் பக்கலில் வைத்துள்ளனர். மூன்று மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது மண்டபம் 1979இல் நிறைவாகியது. 1977-02-10ந் திகதி மணிக்கோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக காலத்திலிருந்து 1978 வரை 11 தினங்கள் திருவிழா நடைபெற்றது. சுவாமி கும்பத்திலே வீதியுலா வருவார்.

இப்போ வைத்தியகலாநிதி செ. பத்மநாதனைத் தலைவராகக் கொண்ட பரிபாலனசபை நிர்வாகத்தைக் கவனிக்கின்றது. பரிவாரமூர்த்திகளுக்காய ஆலய திருப்பணி வேலைகள் தொடருகின்றன.

தினமும் ஒருவேளைப்பூசை காலை 7-00 மணிக்கு நடைபெறும். வெள்ளிக்கிழமைகளில் மாலை 5-00 மணிக்கும் பூசை நடைபெறுவதுண்டு. சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் கோயில் அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார்கள். கிழக்கு நோக்கியது ஆலயம்.

தகவல்: கனகரத்தினம்

உ
சிவமயம்

# குருநாத சுவாமி ஆலயம்

தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து யாழ் நகர் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் 400 மீற்றர் தொலைவில் வீதியில் மேற்குப்புறமாகவுள்ள ''வயலிருப்பைப் பதி'' அருண்மிகு ஞானவயிரவர் ஆலயத்தின் வடக்கெல்லையில் மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கைவழி சென்று தெற்குப்புறமாகத் திரும்பிச் செல்லுமிடத்து இந்த ஆலயத்தைச் சென்றடைய முடியும். வலி-வடக்கில் துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள ''நல்லான் சீமா'' என்னும் நிலத்தில் வீரசைவ குலத்தைச் சேர்ந்த குருநாதர் என்னும் பெயருடையவர் ஒருவர் ஒரு புளியமரத் தடியில் வேலொன்றை வைத்து, 150 ஆண்டுகளுக்கு முன் வழிபடத் தொடங்கினர். அந்தப் புளியமரம் காலப்போக்கில் தறிக்கப்பட்டு மாவை முருகன் திருப்பணி வேலைகளுக்குப் பயன்படுத்தப் பட்டது. காசிநாதர் பொன்னம்பலம் என்பவர் குருநாதருக்கு ஓலைக்கொட்டில் ஒன்று உருவாக்கினர். பொன்னம்பலத்தின் மகன் அம்பலவாணரும் சுற்றத்தவர்களும் கட்டடங்கள் கட்டும் திருப்பணியைத் தொடர்ந்தனர். இதேவேளை காங்கேசன்துறை குருநாதசுவாமி ஆலயத்திற்கென இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பிரதிட்டை செய்யப்படாதிருந்த தண்டாயுதபாணி விக்கிரகத்தைப் பெறுமதிக்கமையப்பெற்று 1921ஆம் ஆண்டில் இங்கு தாபித்தனர். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ சு. வைத்தியநாதக் குருக்கள் அவர்களாற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1924-04-24 புதன்கிழமை ரோகிணி நட்சத்திரம் கூடிய முற்பகல் பத்துமணி வேளையில் பாலசுப்பிரமணியர் எனும் எழுந்தருளி மூர்த்திக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1928ஆம் ஆண்டில் ஆலயத்திற்குத் தேவையான உள்வீதி வெளிவீதிக் காணிகளை உரிமையாளர்கள் தர்மசாதனம் செய்தனர். 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி, தெல்லிப்பழை கிழக்கு குருநாதசுவாமி ஆலயத்தையும் அதற்குச் சொந்தமான அசைவுள்ள, அசைவற்ற பொருட்களையும் பிரசித்த நொத்தாரிசு க. இ. தம்பி மூலம், உறுதி முடித்துப் பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட பழனியப்பன் திருத்தொண்டர் திருவகுப்பு என்னும் அமைப்பிற்குக் கையளிக்கப்பட்டது. உறுதியிலக்கம்: 663 / 1941 / 14 என்பது. பூசகருக்கென ஒரு வீடமைத்து 1941-06-05 வியாழக்கிழமை குடிபுகுந்தனர். சம்புரோசன கும்பாபிஷேகம் 1945-02-09 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதற்குத் தலைமைக் குருவாகச் சுன்னுகத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ க. சுந்தரேசக் குருக்கள் இருந்து இனிதே நிறைவேற்றினர்கள். இதன்பின்னர் கும்பாபிஷேகம் எதுவும் நடைபெறவில்லை.

ஆலய நிர்வாகம் சரியாகக் கவனிக்கப்படாததால் 1980-02-04இல் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டுத் தொண்டர்சபை ஒன்று புதிதாக ஒளிமயம் பெற்றது.

பரிவாரமூர்த்திகளாகப் பிள்ளையார், வயிரவர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், சிங்காரவேலர், காளி என்போர் உளர். பிள்ளையார், பாலசுப்பிரமணியர், ஆறுமுகசாமி, அஸ்திரதேவர், காளி என்னும் எழுந்தருளி மூர்த்திகளும் உள.

இருகாலப் பூசை நிகழும் இந்த ஆலயத்தின் அர்ச்சகராக பிரம்மஸ்ரீ வயித்தியநாதக் குருக்களின் மகன் சதா சிவ ஐயர் பணிபுரிகின்றார். நந்தி, பலி பீடம், மணிக்கூண்டுக் கோபுரம், மடைப் பள்ளி என்பன இங்குண்டு. குதிரை, மயில், கேடகம் என்னும் வாகனங்களும் அடியார்களின் அன்பளிப்பாக உள்ளன. சங்காபிஷேகத்திற்கு வேண்டிய வலம் புரிச் சங்கு முதலிய பொருள்களும் மண்டப அமைப்பு உபகரணங்களும் இந்த ஆலயத்தில் உள்ளன.

சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆவணிச் சதுர்த்தி, விஜயதசமி, கந்தசஷ்டி (கலி யாணத் திருவிழாவுடன்), கார்த்திகைத் தீபம், திருவாதிரை, தைப்பொங்கல், தைப்பூசம், தைப்புனர்பூசம், (மண வாளக்கோலம்), சிவராத்திரி, பங்குனி உத்தரம் என்னும் காலங்களில் விசேட திருவிழா நடைபெறுவதுண்டு. திருவா திரை விழாவிற்கு மாணிக்கவாசக சுவாமி களின்திருப்பொன்னூஞ்சலும்மணவாளக் கோலத் திருவிழாவிற்கு எச்சரிக்கை, பராக்கு முதலியவற்றுடன் "சீர்த்தி பெறு பூஞ்சினைகள் பந்தராக" என்று தொடங்கும் ஊஞ்சற்பாடலும் ஏனைய விழாக்களுக்கு "திருமேவு சைவருறை தெல்லிநகர் வாழும்" என்று தொடங் கும் வெண்பாவை முதலாகவுடைய ஊஞ் சற்பாடலும் படிக்கப்பெறுகின்றன, பின்னை இரு ஊஞ்சற்பாக்களும் மாவை நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களால் ஆக்கப்பெற்றவை.

தகவல்: திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி

---

உ

சிவமயம்

# பெரியகலட்டி ஞானவயிரவர் ஆலயம்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு கிழக்கே கல்லூரி வாயிலிலிருந்து சுமார் 250 மீற்றர் தொலைவில் பிரதான வீதியில் ஒரு சிறிய மதவு உண்டு. அந்தவழி யூடாக வடக்கு நோக்கி சுமார் 200 மீற்றர் செல்ல பெரியகலட்டி ஞானவயிரவர் ஆலயம் எமது தரிசனைக்குள்ளாகும், முதலிக்குட்டி ஞானவைரவர் என்ற ஒரு பெய ரும் உண்டு. கிழக்கு நோக்கிய வாயிலை உடையது.

மூன்று மண்டபங்களைக்கொண்ட இந்த ஆலயத்தின் இறுதிக் கும்பாபிஷேகம் 1980இல் நடைபெற்றுள்ளது. விபரம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. துர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவைச் சார்ந்தது இது.

மூலமூர்த்தி வயிரவர் - சூலம், நாகதம்பிரானும் இருக்கின்றார். மணிக்கூண்டுக் கோபுரம் உண்டு. குதிரை, நாய் வாகனங்களையுடைய இந்த ஆலயத்தில் ஒருநேரப் பூசையுண்டு. தைப்பூசம், திருவாதிரை, விஜயதசமி என்னும் தினங்களில் சுவாமி வீதியுலா வருவார். சிவத்திரு வெங்கடாசலம் பாலசுப்பிரமணியம் அவர்கள் அர்ச்சக ராகப் பணிபுரிந்து வருகின்றார். திரு. சா. ஐ. விஜயநாயகம் என்பவர் தலைமையில் ஒரு பரிபாலனசபை உண்டு. "சீர்மேவும் புகழீழ தீபஞ்சார்ந்த" எனும் முதலை யுடைய ஊஞ்சற்பாடலும் உண்டு.

தகவல்: திருமதி நடராசா செல்வராணி

சிவமயம்

# கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பிரதான வீதிவழி சுமார் 500 மீற்றர் தூரம்வரை செல்ல ஒரு மதவு வருகின்றது. அதிலிருந்து 15 மீற்றர் வரை மேற்கே செல்ல ஒரு கிளை வீதி வடக்குப் புறமாகத் திரும்புகின்றது அது வளைந்து வளைந்து சுமார் ஒரு கிலோமீற்றர் சென்றதும் வீதியின் தென்புறமாக இந்த ஆலயத்தைக் கண்டு வழிபடக்கூடிய வாய்ப்புண்டு. மூன்று வேளை பூசை நடைபெறும் இந்த ஆலயம் துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவில் உள்ளது

150 வருடங்களுக்கு முற்பட்ட வழிபாட்டு வரலாற்றை உடைய இந்த ஆலயம் கிழக்கு நோக்கியது. ஆரம்பகால வரலாறுபற்றித் தெளிவாக எதுவும் தெரியவில்லை. தேற்று மரத்தின்கீழ் வைத்து ஆரம்பத்தில் வழிபாடு நடைபெற்றது. பின்னர் ஓலைக்கொட்டில் ஒன்று இருந்திருக்கின்றது. அந்த ஓலைக் கொட்டிலைக் கந்தர் சின்னக்குட்டி, கதிரவேலு தம்பையா ஆகிய இருவருமாகச் சுண்ணும்புக்கற் கட்டிடமாக்கினர். சிவத்திரு. கா. சிதம்பரப்பிள்ளைக் குருக்கள் கும்பாபிஷேகத் தலைமைக் குருவாக அமர்ந்து நிறைவுசெய்தார். அக்காலத்தில் பூசகராகிய கதிரவேலு தம்பையா என்பவர் கதிர்காமஞ் சென்று மாணிக்க கங்கையில் நீராடுகையில் பவுணினுற் செய்யப்பட்ட வேலொன்று கிடைத்தது. அந்த வேலை மிகுந்த பயபக்தியுடன் எடுத்து கதிர்காமக் கோயிற் கப்புறுளையிடம் கொடுப்பதற்காகக் கொண்டு சென்றூர் ''நீர் வழிபடும் வைரவப் பெருமானுடன் முருகனையும் வைத்து வழிபடும்'' என்று கப்புறுளை கூறிவிட்டார். தான் வழிபடும் வைரவர்பற்றிக் கப்புறுளை அறிந்துகொண்டாரே, என்று சிந்தித்து இறைவனின் பெருங்கருணைத் திறத்தை வியந்து அந்த வேலை இங்கு கொண்டுவந்து வைரவருடன் வைத்து வழிபட்டுவந்தார். அந்த வேல் வந்தமை காரணமாகக் கதிர்காமத் தீர்த்தம், திருக்கார்த்திகை, தெய்வயானையம்மன் திருக்கல்யாணம், கந்த சஷ்டி, வள்ளியம்மன் கல்யாணம் ஆகிய உற்சவங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. அர்ச்சகர் சிவத்திரு. தம்பையாவின் மகன் வல்லிபுரம் அவர்கள் சுண்ணும்புக்கற் கோயிலைக் கலைக்கோயில் ஆக்கினுர். பரிவார மூர்த்திகளாய விநாயகர், இராசஇராசேஸ்வரி, சுப்பிரமணியர், நடேசர், சனீஸ்வரர், சண்டேஸ்வரர், சேத்திரபாலர், நாகதம்பிரான் என்போர்க்கும் கலையழகுமிகு கோயில்கள் உண்டு. 1972-01-30 தைப் பூச நட்சத்திரத்தில் கீரிமலை சிவ ஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் தலைமையிற் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

தைப்பூசம் தொடக்கம் 15 தினங்கள் அலங்கார உற்சவமும், தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனி உத்தரம். வருடப்பிறப்பு, வைகாசி விசாகம் ஆனி உத்தரம், கதிர்காமத் தீர்த்தம், விநாயக சதுர்த்தி, விஜயதசமி, திருவாதிரை என்னும் காலங்களில் விசேட வழிபாடும் நடைபெறுவதுண்டு. கதிர்காமத் தீர்த்தம் எடுத்துக்கொண்டுவந்து தீர்த்தம் ஆடப்படும் சிறப்பு இங்கு நடைபெறுகிறது. மாணிக்ககங்கையிற் கிடைத்த வேல் இப்போது வசந்தமண்டபத்து உண்டு.

நாய், எலி, குதிரை, மயில், சிங்கம், இடபம், கடா, சூரன் முதலிய வாகனங்கள் உண்டு. ஆறு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தில் மஞ்சமும் உண்டு. சுவானம், பலிபீடம், மணிக்கூட்டுக் கோபுரம், என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. மூலமூர்த்தி வைரவர் கருங்கல்லால் ஆனது. வைரவர், முருகன், ஆறுமுகசாமி என்போரது எழுந்தருளிகள் உண்டு. ஊஞ்சற்பா உண்டு. இன்றைய அர்ச்சகர் சிவத்திரு வல்லிபுரம் பாலசுப்பிரமணியம், வல்லிபுரம், நித்தியானந்தம் முகாமையாளராகப் பணிபுரிகின்றூர்

தகவல் : **வல்லிபுரம் நித்தியானந்தம்**

உ
சிவமயம்

# சூலாம்பத்தை வைரவர் ஆலயம்

தெல்லிப்பழை அஞ்சலகத்தின் வடக்கெல்லையில் சந்தை நடைபெறும் நிலத்தின் தெற்கில் தெல்லிப்பழைக் கிராமசேவகர் பிரிவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. நூறுண்டு வயதை அண்மிய இந்த ஆலய வழிபாட்டாளர்கள் வேள்வை வைரவர் ஆலய வழிபாட்டாளர்களுடன் உண்டாய தகராறு காரணமாகப் பிரிந்து வந்து பலியிடுதலை மறுப்பவர்கள் சார்பாக இதனைக் கட்டினுர்கள். கிழக்கு வாயிலை உடைய புதிய கட்டடம் அமைக்கப்பட்ட பின்1968இல் கீரிமலை சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1982இலும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுள்ளன.

மூலமூர்த்தியாக வைரவர்சூலம் உண்டு. ஐம்பொன்னுலாய பிள்ளையார் பரிவாரமூர்த்தியாகவுள்ளார். வைகாசிவிசாகத்தில் ஒரு திருவிழா நடைபெறும். சுவாமி வீதியுலா வருவதுண்டு, நாய்வாகனம் ஒன்று உண்டு. வீணியவரை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு இங்கேயும் பூசகராகப் பணிபுரிகின்றுர். முகாமை சீனிவாசகம் துரைரத்தினத்துக்குரியது. எனினும் நிர்வாகம் பொதுவாயுள்ளது.

தகவல்: சீனிவாசகம் துரைரத்தினம்

உ
சிவமயம்

# குடவத்தை அம்பலை ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மேற்கெல்லையில் உள்ள ஒழுங்கையில் பிரதான வீதியிலிருந்து வடக்கே சுமார் 50 மீற்றர் தொலைவில் இந்த ஆலயம் உண்டு. 120 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆலயத்தில் முன்பு ஓலைக்கொட்டிலில் சூலத்தை வைத்து வழிபட்டனர். 1925இல் திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டு 1927ஆம் ஆண்டு கீரிமலை சிவஸ்ரீ வி. ச. தற்பரானந்தக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் 1972இல் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. திருப்பணிவேலைகள் நிறைவாகி 1980இல் சிவத்திரு க. சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நான்கு மண்டபங்களையுடைய இன்றைய ஆலயத்தின் மூலமூர்த்தி வைரவர் சூலம்; இரண்டாவது மண்டபத்தில் விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றுர். மணிக்கூட்டுக் கோபுரத்துடன் நாகதம்பிரானையும் பார்க்க முடிகின்றது.

ஆலய உரிமையாளர்களாய சிவத்திரு நீலகண்டர் கதிரமலை குடும்பத்தினரும் சிவத்திரு சீனியர் சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினரும் வருடத்துக்கு ஒருவராக பூசனை வேலைகளைக் கவனிக்கின்றனர். துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த இந்த ஆலயம் கிழக்கு நோக்கியது. முன்பு அலங்கார உற்சவம் 12 தினங்கள் நடைபெற்றதுண்டு. விரைவில் எழுந்தருளி மூர்த்தி கிடைக்கவுள்ளது. ''சீராரு மீழவளநாட்டில் வாய்ந்து'' என்று தொடங்கும் திருவூஞ்சற் பாடலும் உண்டு.

தகவல்: சீனியர் சிதம்பரப்பிள்ளை

உ

சிவமயம்

# வயலிருப்பைப்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதான வீதிவழி தெற்குநோக்கிச் சுமார் 600 மீற்றர் வரை செல்ல வீதியின் மேற்குப் புறத்தில் கிழக்கு நோக்கிய இந்த ஆலயம் எமது தரிசனைக்குள்ளாகும். இந்த நூற்றுண்டின் ஆரம்ப பகுதியை ஆதியாகக் கொண்ட இந்த ஆலயம் இருக்குமிடம் தூர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவில் வயலிருப்பைப் பதி என்னும் நிலத்ததாகும். இந்த நிலத்தில் நின்றதொரு ஆல மரத்தினடியிற் சூலம் வைத்து வழிபாடியற்றப்பட்டது. அதனுல் ஆலடி வைரவர் ஆலயம் எனும் வழக்கம் உண்டு.

1915ஆம் ஆண்டு வரையில் இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கலாம். பின்னர் 1953இலும் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றன. ஆயின் 1984வரை கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. 1983-01-16ஆம் திகதி புனரமைப்புச் சம்பந்தமாக நடந்ததொரு ஆலோசனைக் கூட்டத்தில் திரு. சி. சங்கரப்பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்ட பதினொரு உறுப்பினர்களுடன் கூடிய திருப்பணிச்சபை தெரிவாகியது. 1983-04-17இல் சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. 1983-09-11இல் ஆதிமூலத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. 1983 – 10 – 21இல் நாகதம்பிரான் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. வேலை அபிவிருத்தியில் தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கப் பங்களிப்பு பாராட்டிற்குரியது. 1984–01-19இல் தைப்பூசத்தன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்களைத் தலைமைக் குருவாகக் கொண்ட அந்தணப் பெருமக்கள் கிரியைகளைச் செவ்வனே நிறைவு செய்தார்கள்.

மூலமூர்த்தி வைரவர் திரிசூலம். விநாயகர், நாகதம்பிரான் என்னும் பரிவார மூர்த்தங்களும் உண்டு. நான்கு மண்டபங்களையுடைய இதன் தலவிருட்சம் ஆல். சிவஸ்ரீ தியாகராசக் குருக்கள் சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் அர்ச்சகராகப் பணிபுரிகின்றுர்கள். 1984இல் குடமுழுக்கு சிறப்பு மலர் வெளியாகியுளது.

"ஒரு சமயம் இவ்வாலயத்தில் புராணபடனம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை விளக்கிற்குத் தேங்காய் நெய் இல்லாதுபோனதால் அடியவர் ஒருவரின் வீட்டில் இருந்து நாய்வடிவில் எம்பெருமான் எண்ணெயைக் கொணர்வித்தார்" என்ற கர்ணபரம்பரைக் கதை எம்பெருமான் அற்புதம் சம்பந்தமாகப் பேசப்படுகின்றது.

தகவல். சு. ஏழூர்நாயகம்

உ

சிவமயம்

# செஞ்சலன ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் கிழக்கே சுமார் 400 மீற்றர் தொலைவில் பிரதான வீதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் சுமார் 200 மீற்றர் வரை செல்ல செஞ்சலன வைரவரைத் தரிசிக்கலாம். துர்க்காபுரம் கிராமசேவகர் பகுதியைச் சார்ந்தது இந்த இடம்.

150 வருடங்களுக்கு மேற்பட்ட கால வரலாற்றை உடைய இந்த இடத்தில் பூவரசின் அடியில் ஆரம்ப வழிபாடு நடைபெற்றது. கந்தர் என்னும் பெயருடைய ஒருவர் முதலிலே கொட்டிலமைத்திருக்கலாம். குமரேசர் இராமலிங்கம் என்பார் அதனைச் சுண்ணும்புக்கற் கட்டிடம் ஆக்கினர். பின்னரும் திருத்த வேலைகள் செய்யப்பட்டு 1969 ஐப்பசியில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. முதன்மைக் குருக்களாகக் கரணவாயைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் இருந்திருக்கின்றார்கள்.

நான்கு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்து மூலமூர்த்திவைரவர் கருங்கல் விக்கிரகம். பரிவார மூர்த்தங்களாகப் பிள்ளையார், நாகதம்பிரான் உளர். மூலமூர்த்திக்கு வெள்ளி அங்கி உண்டு. மணிக்கூட்டுக் கோபுரம் சுவானம், பலிபீடம் என்பனவும் உண்டு. காளிதேவி இரண்டாவது மண்டபத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். தினமும் ஒரு வேளைப் பூசை மாலை ஐந்து மணிக்கு நடைபெறும். இந்த ஆலயத்தின் அர்ச்சகராக சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் சதாசிவ ஐயர் பணிபுரிகின்றார்கள். ஆலய வேலைகளைக் கவனிக்கவென க் கந்தசாமி ஞானேஸ்வரன் தலைமையில் ஒரு பரிபாலனசபை அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய இந்த ஆலயத்திற்கு 1116/1983-03-01 என்னும் இலக்க உறுதியில் பதிவு செய்யப்பட்ட தருமசாதன நிலம் உண்டு, ''சீராரு மீழவள நாட்டில் மேவும்'' என்னும் தொடக்கத்தையுடைய ஊஞ்சற்பாடல் உண்டு.

தகவல்: நாகலிங்கம் செல்லத்துரை

உ

சிவமயம்

# நல்லை நயினர் கிணற்றடி நரசிங்கவைரவர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து தெற்கு நோக்கிப் பிரதானவீதிவழி 400 மீற்றர் வரை செல்ல, இப்போதுள்ள உதவியரசாங்க அதிபர் பணிமனையின் வடக்கெல்லை வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று தெற்கே திரும்பிச்செல்ல இந்த ஆலயத்தை அடைய முடியும் ஒரு 75 ஆண்டுகால வழிபாட்டு வரலாறு இருக்கலாம். ஆரம்பத்தில் ஒரு வெளியில் சூலம் வைத்து வழிபட்டனர். திரு சங்கரப்பிள்ளை என்னும் பெயருடைய ஒருவர் ஆதரித்துள்ளதாகச் சொல்லுகின்றார்கள். இப்போது ஒரு மண்டபத்தையுடைய சிறிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது. 1985 லிருந்து திரு. இ. குகதாசனைத் தலைவராகக் கொண்ட இந்து இளைஞர் சங்கம் பொறுப்பேற்று நிர்வகிக்கின்றது. தினமும் ஒருவேளைப்பூசை நடைபெறுகின்றது. அர்ச்சகராகச் சிவஸ்ரீ தியாகராசக் குருக்கள் சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் பணிபுரிகின்றார்கள். இந்த ஆலயம் தெல்லிப்பளைக் கிராமசேவையாளர் பிரிவைச் சார்ந்தது.

தகவல் : கந்தையா அருந்தவராசா

சிவமயம்

# இப்பிலிசிட்டி வைரவர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதானவீதியில் யாழ்நகர் நோக்கிச் சுமார் 700 மீற்றர்வரை செல்ல வீதியின் கிழக்கோரமாக ஒரு மாமரம் உண்டு. அதற்கு ஒரு பத்து மீற்றர்வரை வடக்கே கிழக்கு நோக்கி ஒரு சிறிய பாதை வெள்ளவாய்க் காலைத் தாண்டிச்செல்கிறது. அப்பாதையில் 150 மீற்றர்வரை செல்ல இந்த வைரவர் ஆலயத்தைத் தரிசிக்கமுடியும் பிரதானவீதியின் மேற்கே, இற்றைக்குச் சிலகாலத்தின் முன் மறைந்த திரு. மண்டலநாயகம் என்பவரது வளவில் இந்தவைரவர் வழிபாடு ஆதியிலே தொடங்கியதென்ற குறிப்பு உண்டு. இடம்மாறி இப்போதுள்ள இடத்திற்கு வந்தமைக்கான காரணம் தெளிவாகவில்லை.

திரு. கந்தர் சிதம்பரப்பிள்ளை இந்த இடத்தில் ஓர் ஓலைக்கொட்டில் சமைத்து அதிலே இறைவனை வணங்கினர். 1969இல் ஆறுமுகம் வயிரவப்பிள்ளை என்பவர் இப்போதுள்ள கட்டடங்களைக் கட்டுவித்தார். கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. தினமும் விளக்கேற்றப்படுகின்றது. வைகாசி விசாகப் பொங்கல் வெகுவிமரிசையாக நடைபெறுவதுண்டு. அந்தவேளையில் சிவஸ்ரீ சிவகடாட்சக்குருக்கள் கணேசலிங்கக் குருக்கள் பூசனை வேலைகளைக் கவனிப்பார். முகாமை வயிரவப்பிள்ளை வேனிலானைச் சார்ந்தது. முன்பிருந்த பலியிடும் வழக்கம் 1962 இல் நிறுத்தப்பட்டது. இது தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச்சார்ந்தது. வடக்கு நோக்கியது.

தகவல் : **வயிரவப்பிள்ளை வேனிலான்**

உ

சிவமயம்

# புதுத்தோட்ட ஆதி வைரவர்

தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரிக்குக் கிழக்கே 250 மீற்றர் தொலைவில் வெள்ள வாய்க்கால் போன்றமைந்த பாதையொன்று பிரதான வீதியிலிருந்து பிரிந்து கிழக்கு நோக்கியும் தெற்குநோக்கியும் வளைந்து வளைந்து செல்கின்றது. அப்பாதையில் 350 மீற்றர் தொலைவில் பாதையின் வடக்குப்புறத்தில் இந்த ஆலயம் உண்டு. துர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவைச்சார்ந்தது இந்த இடம். ஆலயம் கிழக்கு நோக்கியது. நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து பூவரசின்கீழ் வழிபட்டனர். பின் சூலம் வைத்தனர். 1958 வரையில் கோயில் கட்டப்பட்டது. இரண்டு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி சூலம். நிர்வாகம் பொதுவானது. திருமதி குருசாமி இராசம்மா என்பவர் விளக்கேற்றுகின்றார். விசேட தினங்களில் ஐயாவை அழைத்துப் பூசை வைக்கப்படும். பிரயாணி ஒருவர் இந்த இடத்திலே இருட்டியவேளை பணத்தைத் தவறவிட்டுவிட்டார் என்றும் வயிரவரை வேண்டிக் கொண்டு கையால் நிலத்தில் தடவியபோது எங்கிருந்தோ அந்த இடத்தை நோக்கி வெளிச்சம் வந்ததாகவும் அந்த வெளிச்சத்தில் தவறிய பணம் கிடைத்ததாகவும் கர்ணபரம்பரைக் கதை ஒன்றுஉண்டு.

தகவல்: **திருமதி குருசாமி இராசம்மா**

உ

சிவமயம்

# தம்போதனை ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பளைப் புகையிரதநிலையத்திற்குக் கிழக்குப்புறமாக, தில்லையிட்டி விநாயகர் ஆலயத்திற்குத் தெற்கே சிறிது மேற்குநாடி இந்த ஞான வைரவர் ஆலயம் இருக்கின்றது. தெல்லிப்பளை கட்டுவன் வீதியிலுள்ள தில்லையிட்டி விநாயகராலயத்தின் கிழக்குவீதி வழியாகத் தெற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கை மூலம் இந்த ஆலயத்தை அடையலாம். பிரம்மஸ்ரீ கிருஷ்ணையர் இராமசாமி ஐயர் காலத்திலே சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு இவ்வழிபாடு ஆரம்பமாயதென்று கொள்ளலாம். ஐயா அவர்களது சொந்த நிலத்தில் அவர்களது சொந்த முயற்சியில் இவ்வாலயம் உருவாயது. நான்கு மண்டபங்களைக் கொண்டதாக இன்று காணப்படும் ஆலயம் பல அடியவர்களின் உபகரிப்புடன் 1860 ஆம் ஆண்டை அண்மிய காலப் பகுதியில் கட்டப்பட்டது. காலத்திற்குக்காலம் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷேகங்களும் நடைபெறுகின்றன 1960 இல் இறுதியாக நடைபெற்ற கும்பாபிஷேகமே நினைவில் நிற்கின்றது. ஊரெழுவைச்சேர்ந்த பிரம்மஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் அவர்கள் தலைமையேற்று இக்கும்பாபிஷேகத்தை இனிது நிறைவு செய்தார்கள். மூலமூர்த்தியாகக் கருங்கல்லாலான வைரவப் பெருமான் அமர்ந்திருக்கின்றார்கள். பிள்ளையார், காளி, சனீஸ்வரன் என்போர் பரிவாரமூர்த்தங்களாக உள்ளனர் சுவானம் பலிபீடம் மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் இவ்வாலயத்துண்டு. மேற்கு நோக்கிய இந்த ஆலயத்தில் முற்பகல் 10 மணி மாலை 5 மணி என இருகாலப்பூசை நடைபெறுகின்றது

மாசிமகத்திலன்று தீர்த்தோற்சவம் நிகழக்கூடிய வகையில் பத்து நாள்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்றதுண்டு. மகத்திற்கு முதல் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெற்றுள்ளது. இப்போ திருவிழாக்கள் நடைபெறுவது நிறுத்தப்பட்டுத் திருப்பணிவேலைகள் தொடருகின்றன. இன்றைய ஆலய முகாமையாளராக இருக்கும் பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்கள் திருச்செந்திநாத சர்மா அவர்களே அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார்கள்.

தொடக்க காலத்தில் வைரவர் வழிபாடு இடம்பெற்ற இந்த ஆலயத்தில் இடைக்காலத்தில் விநாயக வழிபாடு நடைபெற்றதாகவும், இந்த மாற்றத்துக்குக்காரணராய் அமர்ந்த அர்ச்சகருக்கும் மற்றுமுளோருக்கும் பல தொல்லைகள் வந்து சேர்ந்ததாகவும் வைரவர் கனவிற்றோன்றித் தம்வழிபாடே தொடர வேண்டுமென அறிவுறுத்தியதாகவும் மூதறிஞர்கள் சிலர் சொல்லுகின்றனர் இந்த நிகழ்ச்சி மீண்டும் வயிரவர் வழிபாட்டை இங்கு தொடக்கி வைத்ததென்றும் அறிகின்றோம். கருவறை விநாயகர் வழிபாட்டிற்குப் பயன்பட்ட விக்கிரகம் இன்றும் ஆலயத்திலுளது.

ஆலயத்திற்கான தருமசாதன நிலம் மாதகல், நுணசை முருகமூர்த்தி ஆலயத்தின் தென்புறத்தில் கிழக்கே இருபது பரப்பும், விளான் சந்தியிலிருந்து மாதகல் நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் மாதகல் கத்தோலிக்க தேவாலயத்தின் பின்னே ''விறவில்'' என்னும் இருபது பரப்பும் தெல்லிப்பளையிற் பதினைந்து பரப்பும் ஆக மொத்தம் 55 பரப்பு உண்டு. இவையெல்லாம் தற்போது சிலரது சொந்தப் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தகவல்: பிரம்மஸ்ரீ ச, திருச்செந்திநாதசர்மா

உ
சிவமயம்

# தேரம்பல வைரவர் ஆலயம்

ஸ்ரீ துர்க்காதேவியாலய முன்றிலிலிருந்து பிரதானவீதிவழி சுமார் 400 மீற்றர் வரை தெற்குநோக்கிச் செல்ல மேற்கு நோக்கி ஒரு வீதி பிரிந்து செல்கின்றது. அந்த வீதியில் சுமார் 1200 மீற்றர் தூரம்வரை சென்று வடக்குப்புறமாகத் திரும்பிப் பார்க்கச் சிறிது மேற்காக இந்த ஆலயம் காட்சி தரும். பேரம்பல வைரவர் என்றும் சிலர் சொல்கின்றனர்.

100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வழிபாட்டுக்காலத்தை உடையது. துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச் சார்ந்தது. பிராய் மரத்தடியில் ஆரம்பவழிபாடு நடைபெற்றுள்ளது. பொன்னையா வீரகத்தி என்பவர் முதலிலே இந்த ஆலயத்திற்குக் கட்டிடம் அமைத்துள்ளார். இப்போ நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருப்பணிகள் பொன்னையா நவரத்தினம் என்பவரது முயற்சியால் நடைபெறுகின்றன. பொன்னையா நவரத்தினம் முகாமையாளராகவும் அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார்கள். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு நேரப்பூசை நடைபெறுகின்றது. ஐந்து மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன. சுவாமி பாலஸ்தாபனம் செய்யப்பட்டபடியே இருக்கின்றது. கும்பாபிஷேகம் விரைவில் நடைபெறலாம். மூலமூர்த்தி வைரவர்சூலம் மட்டுமே உண்டு. நாகதம்பிரான், காளி, பிள்ளையார் ஆகிய பரிவாரமூர்த்தங்களும் உண்டு. 1985க்குப்பின் விசேட விழாக்கள் எதுவும் நடைபெறவில்லை. கோயிலுக்கென்று எழுதப்பட்ட 4 பரப்பு நிலமும் எழுதப்படாத நிலமும் உண்டு. கிழக்கு நோக்கிய இந்த ஆலயம் துர்க்காபுரங் கிராமசேவையாளர் பிரிவைச் சார்ந்தது

தகவல்: சுப்பர் செல்லையா

உ
சிவமயம்

# முருங்காவத்தை வைரவர் ஆலயம்

தேரம்பல வயிரவர் ஆலயத்திற்குக் கிழக்கே 100 மீற்றர் தொலைவில் இந்த ஆலயம் உண்டு. தேரம்பல வயிரவர் ஆலயத்தில் வழிபாடாற்றியவர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக இப்புதிய ஆலயம் தோன்ற நேர்ந்தது. 1937 ஆம் ஆண்டுவரையில் இந்த இடத்தில் வழிபாடு தொடங்கியிருக்கலாம். சிறியதொரு கொட்டில்போட்டு ஆரம்பத்திற் பயன்படுத்தினர். இப்போதுள்ள கட்டிடம் 1968இல் சங்கரப்பிள்ளை செல்வரத்தினம் என்பவராற் கட்டப்பட்டது. அவரே முகமையாளராகவும் அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஒருகாலப்பூசை நடைபெறுகின்றது. விசேட விழாக்களுக்குத் தெல்லிப்பளை சிவஸ்ரீ சிவகடாட்சக்குருக்கள் கணேசலிங்கக்குருக்கள் அழைக்கப்படுவார்கள். சூலம் மட்டும் மூலஸ்தானத்துண்டு. 1970 06 13இல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. ஆனி மாதத்தில் சுவாமி வீதியுலா வருவதுண்டு. கிழக்கு வாயிலையுடைய இந்த ஆலயம் துர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவைச் சார்ந்தது.

தகவல்: சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

உ

சிவமயம்

# புளியடி வைரவர் ஆலயம்

தெல்லிப்பழை யூனியன்கல்லூரி, தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி என்பவற்றின் வடக்கே தெல்லிப்பழை அஞ்சலகத்தின் தென்மேற்கே பிரதான வீதியின் மேற்குப்புறமாகப் புளியமரத்தடியில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருப்பவரது ஆலயந்தான் இங்கே குறிப்பிடப்படுவது. துர்க்காபுரம் கிராமசேவையாளர் பிரிவில் இந்த ஆலயம் கிழக்குநோக்கியுள்ளது.

ஒரு நூற்றாண்டிற்கு முன் புளியமரத்தின்கீழ் சூலம் வைத்து வழிபடத் தொடங்கினார்கள். அந்த நிலப்பகுதியின் உரிமையாளர் விற்றபொழுது திரு. ஆர். வி. ஆறுமுகம் என்பவர் அதனை வாங்கினார்கள். இறைவன் எழுந்தருளியுள்ள அந்த நிலப்பகுதிக்கு எல்லையாக மதில்கட்டி அப்பகுதியைப் புறம்பாக்கிவிட்டார். அத்தோடு சுவாமி இருந்த இடத்திற்கு மரத்தைச்சுற்றி மேடையொன்றமைத்ததுடன் கூரையும் போட்டார்கள்.

இந்த ஆலயத்தில் நடைபெறும் பலிகொடுக்கும் வழக்கத்தை நிறுத்த இந்த ஊரைச்சேர்ந்த சில பிரமுகர்கள் 1947 தொடக்கம் முயன்றார்கள். 1950இல் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். 1951இல் அவ்வழக்கம் நின்றுவிட்டது. நித்திய பூசை ஒரு வேளை நடைபெறுகின்றது. இப்போ வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ அண்ணாசாமி ஐயர் அர்ச்சகராகப் பணிபுரிகின்றார்கள். மூல மூர்த்தி வைரவர் சூலம், முன்னேஒரு மண்டபம், அங்கே சுவானம், பலிபீடம் என்பன உண்டு. மணிக்கூட்டுக்கோபுரம் உண்டு. வைகாசி விசாகத்தை அடுத்துவரும் வெள்ளியன்று பொங்கல்விழா விமரிசையாக நடைபெறும். நிர்வாகப் பொறுப்பைத் திரு. ஏ. வேல்முருகன் ஏற்று நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

தகவல்: திருமதி ரி. சீவரத்தினம்

உ

சிவமயம்

# கிளாலை ஞானவைரவர் ஆலயம்

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் தென்மேல் திசையில் தெல்லிப்பழை கட்டுவன் வீதியிலிருந்து தெற்குநோக்கிச் செல்லும் ஒழுங்கை மூலம் 500 மீற்றர் வரை செல்ல இவ்வாலய இடத்தை அடையலாம். கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்திற்குத் தென்மேற்குத் திசையில் இவ்வாலயம் உண்டு. கிழக்கு நோக்கிய இவ்வாலயம் தெல்லிப்பழைக் கிராமசேவகர் பிரிவில் அடங்குகின்றது.

வண்ணமாதரை முள்ளாக்குளம் ஆலடி ஞானவைவரர் ஆலயத்தில் வழிபட்டோரிடை ஏற்பட்டதொரு மனக்கசப்புக் காரணமாக இப்புதிய வழிபாட்டிடம் 1933இல் பிரிந்து சென்றவர்களால் ஆக்கம் பெற்றது. வாகைமரம் ஒன்றின்கீழ் கல்லுவைத்துக் கற்பூரதீபமேற்றி வழிபாடு ஆரம்பமாயது. தலவிருட்சமாக வாகை மரம் கொள்ளப்படக்கூடியது. 1982இல் இப்போதுள்ள புதிய கட்டிடம் கட்டப்பட்டது. இரண்டு மண்டபங்களை உடைய இந்த ஆலயத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் திரு. ஆறன் செல்வராசா அவர்களால் பூசை செய்யப்படுகின்றது. முகாமை பொதுவானது. நாச்சிமார், வீரபத்திரர், நாகதம்பிரான் ஆய பரிவாரமூர்த்தங்கள் உண்டு.

தகவல்: ஆறன் செல்வராசா

உ
சிவமயம்

# சித்தியம்புளியடி சுடலை வைரவர் ஆலயம்

மல்லாகம் சந்தியிலிருந்து கட்டுவன் சந்தியை நோக்கிச் செல்கையில் சுமார் 900 மீற்றர் தொலைவில் வீதிக்கு மேற்குப்புறமாக கிழக்கு நோக்கிய இவ்வாலயம் உண்டு. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டிடம் இது. குறிப்பிட்ட மல்லாகம் கட்டுவன் வீதிக்குக் கிழக்கே உள்ள ஒரு ஆலயத்து வழிபாடு நடத்தியவர்களில் ஒரு பகுதியினர் பிரிந்து வந்து இந்த இடத்தில் வழிபாட்டைத் தொடர்ந்தனர். தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவினுள் இந்த இடமும் அடங்கும். தொடர்ந்து இருந்துவந்த பலி கொடுக்கும் முறைமை 1983இல் நிறுத்தப்பட்டது. இப்போதுள்ள மூன்று மண்டபங்களைக் கொண்ட கட்டடம் 1985இல் நிறைவாகியது. கருங்கல்லால் ஆன மூலமூர்த்தி உண்டு. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டும் பூசை நடைபெறுகின்றது. அர்ச்சகர் நாதன் ஐயம்பிள்ளை குணபாலசிங்கம் என்பவர். தவசி ஐயம்பிள்ளை ஞான சேகரம் என்பவர் முகாமையில் நிர்வாகம் உண்டு. கோவிற்புலம் அண்ணமார் சிவன் விஜயதசமி வேளையில் இந்த ஆலயத்திற்கு வருகைதந்து மானம்பூ நடத்துவது உண்டு. கோயிலுக்கென இரண்டு பரப்பு நிலம் உண்டு.

தகவல்: ஐயம்பிள்ளை ஞானசேகரம்

உ
சிவமயம்

# கல்வளவு ஸ்ரீ வைரவர் ஆலயம்

தெல்லிப்பளை யாழ்நகர்வீதியில் தெல்லிப்பளைச் சந்திக்குத் தெற்கே 450மீற்றர் தூரத்தில் உள்ள வயலிருப்பைப்பதி அருண்மிகு ஞானவைரவர் ஆலயத்திற்குத் தெற்கே மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கை தெற்கும் மேற்குமாக வளைந்து வளைந்து செல்லும்போது தெல்லிப்பளை கிழக்கு காளியம்பாள் ஆலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் என்பவற்றைக்கடந்து சென்று மேற்கு நோக்கிப் பின் வடக்கே திரும்ப இந்தச் சிறிய ஆலயத்தைக் காணமுடியும். இப்பகுதி துர்க்காபுரம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தது. ஆலயம் கிழக்கு நோக்கியது,

பிரம்மஸ்ரீ வேதக்குட்டிக்குருக்கள் தியாகராசக்குருக்கள் இதனை 120 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தார் என்று சொல்கின்றனர். 1948 வரையில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கலாம். மூலமூர்த்தியாய வைரவப்பெருமானை பிரதிநிதிப்படுத்தும் சூலம் அங்கே உண்டு. தலவிருட்சங்களாக அரசு, வேம்பு சேர்ந்து வளர்கின்றன, பூசையும் நடைபெறுகின்றது. பரிவார மூர்த்தமாகப் பிள்ளையார், இரண்டாவது மண்டபத்தில் உள்ளார். பலிபீடம் சுவானம் மூன்றும் மண்டபத்துண்டு. பொது மக்களின் உதவி கொண்டு கட்டப்பட்ட இந்த ஆலயத்தில் மூன்று மண்டபமுண்டு. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் ஒரு நேரப்பூசை நடைபெறும்,

முகாமையாளராய்த் தெல்லிப்பளை பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் சதாசிவ ஐயர் அவர்களே ஆலய அர்ச்சகராகவும் பணிபுரிகிறார்கள்.

தகவல்: பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் சதாசிவஐயர்

உ
சிவமயம்

# கொத்தியாலடி சுடலை வைரவர் ஆலயம்

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய நிலையத்தின் வடகீழ்த் திசையில் இந்துமயான எல்லையில் இந்த ஆலயம் உண்டு. தெல்லிப்பழையிலிருந்து கட்டுவன் நோக்கிச் செல்லும் வீதியிற் சென்று வைத்தியசாலைக்குக் கிழக்கே - சுடலைக்குக் கிழக்கே வடக்கு நோக்க இவ்வாலயத்தைத் தரிசிக்கலாம்,

தெல்லிப்பழை கட்டுவன் வீதிவழியாகச் செல்பவர்களது அச்சத்தை நீக்கி அருள்பாலிக்கும் வண்ணம் இந்த ஆலயம் இடுகாட்டின் அருகாமையில் அமைக்கப் பட்டுள்ளது, வீதியின் தென்புறத்தில் கிறீஸ்தவர்களது இடுகாடும் உண்டென்பது குறிப்பிடத்தக்கது.

1930ஆம் ஆண்டளவில் அப்பாக்குட்டி மயில்வாகனம் என்பவரால் ஓதியமர நிழலில் இவ்வாலய வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது, அரசின் அண்மைக்காலத்திய அட்டூழியச் ''செல்லடி'' காரணகாகக் குறிப்பிட்ட மரம் சிதைவடைந்து பட்டு விட்டது. இந்த ஆலய நிர்மாணத்திற்கு வல்லிபுரப்பரிகாரியார், வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் என்போர் ஊக்குவிப்பு அளித்தனர். ஆலயம் மூன்று மண்டபங்களைக் கொண்டது. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுகின்றது. பிரம்மஸ்ரீ வீரபத்திரஐயர் அவர்கள் அர்ச்சகராகப் பணிபுரிகின்றார். திருமதி சிவ சுப்பிரமணியம் மனோரஞ்சிதமலர் என்பவருடைய முகாமையிலுள்ள ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் சூலம் உண்டு.

தகவல்: **அப்பாக்குட்டி மயில்வாகனம்**

உ
சிவமயம்

# வண்ணமாதரை ஞானவைரவர் ஆலயம்

கிளானை ஞானவைரவர் ஆலயத்தின் தெற்கே சிறிது மேற்காக நூறு மீற்றர் தொலைவில் இவ்வாலயம் உண்டு. இதன் பின்னே முள்ளாக்குளம் உண்டு. அதனால் முள்ளாக்குளம் ஆலடி ஞானவைரவர் என்றும் சொல்வர். கொடிக்கம்ப வைரவர்என்ற பெயரும் உண்டு. இந்த இடத்திய வழிபாடு 150 வருடங்களுக்கு முற்பட்டது. இரண்டு மண்டபங்களைக் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ள இப்போதுள்ள மண்டபம் மேற்கு நோக்கியது தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்தது. மூல மூர்த்தியாகச் சூலமுண்டு. அர்ச்சகராகப் பணிபுரியும் மல்லாகம் ஸ்ரீ காசிப்பிள்ளை யார் இரமணி ஐயர் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூசை செய்கின்றார். விசேட தினங்களிலும் பூசை நடைபெறும். திரு. சின்னத்தம்பி நாகராசாவைத் தலைவராகக் கொண்ட பரிபாலனசபை உண்டு.

தகவல்: **சின்னத்தம்பி நாகராசா**

உ

## மகாதனை நரசிங்க வைரவர் ஆலயம்

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நுழைவாயிலுக்கு வடக்கே சுமார் 150 மீற்றர் தொலைவில் மேற்கு நோக்கி ஒழுங்கை ஒன்று செல்கின்றது. அந்த ஒழுங்கை வழி சுமார் 400 மீற்றர் வரை செல்ல இந்த ஆலயத்தை அடையலாம். ஒரு நூற்றாண்டிற்கு முந்திய வழிபாட்டையுடைய இந்த ஆலய மூர்த்தியை நரசிங்கர் என்னும் பெயருடைய ஒருவர் தமது கோணுசீமா என்னும் பெயருடைய நிலத்தில் அமைத்தார் என்று அறிய முடிகின்றது. இந்த ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகத்தைத் தெல்லிப்பளை சிவஸ்ரீ இராமசாமிக்குருக்கள் முத்துக்குமாரசாமிக்குருக்கள் தலைமை தாங்கி நடாத்திவைத்துள்ளார்கள். இரண்டாவது கும்பாபிஷேகம் 1951 ஆம் ஆண்டு, இன்றைய ஆதீனகர்த்தாவின் தந்தையான சிவ ஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்கள், சிவ கடாட்சக்குருக்கள் மேற்பார்வையில் ஊரெழு சிவஸ்ரீ முருகையாக்குருக்களால் நிறைவு செய்யப்பட்டது.

ஆலய பரிபாலன முயற்சிகளில், ஆதீனகர்த்தாவும் இன்றைய அர்ச்சகருமாகிய சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்களுக்கு அனுசரணையாக இருக்கக்கூடிய நிர்வாகசபையொன்றை 1982 வரையில் திரு. வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் தலைமையில் உருவாக்கினர். அச்சபை மூன்று ஆண்டுகளில் முக்கிய திருப்பணிகளை நிறைவுசெய்தது. அதனால் 1985-06-09 ஞாயிற்றுக்கிழமை தெல்லியூர் சிவஸ்ரீ சிவகடாட்சக்குருக்கள் கணேசலிங்கக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின்பின் நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாகசபையின் தலைவராக திரு. நடராசா செல்வநாயகம் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் மணவாழக் கோலத்திருவிழா நடைபெற்றது 1987ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மணிக்கூட்டுக் கோபுரம் கட்டும் திருப்பணிவேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எழுந்தருளியுடன் விநாயகர், முருகன், நாகதம்பிரான் முதலிய பரிவாரமூர்த்தங்களுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன, தினமுப் ஒருவேளைப்பூசை நடைபெறுகின்றது. நான்கு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்தில் ஒரு நாய் வாகனம் மட்டும் உண்டு. இந்த ஆலயப்பகுதி துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவைச்சேர்ந்தது.

தகவல்: **சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள்**

உ

## புத்திரன்கொண்டான் ஞானவைரவர் ஆலயம்

பெரியகலட்டி ஞானவைரவர் ஆலயத்திலிருந்து கிழக்கு நோக்கி ஒரு 100 மீற்றர் வரை செல்ல இந்தச் சிறிய ஆலயத்தைத் தரிசிக்கலாம். இரண்டு மண்டபங்களைக் கொண்ட இந்த ஆலய மூலமூர்த்தி வைரவர் சூலம். பக்கலில் காளி, யந்திரத்தகடு என்பன உண்டு.

1968ஆம் ஆண்டு முதலிற் கொட்டில் போடப்பட்டு 1984-01-18இல் சிவத் திரு. வெங்கடாசலம் பஞ்சலிங்கம் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அர்ச்சகராகப் பணிபுரியும் சேனுதிராசா தர்மகுலசிங்கம் என்பவர் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசைசெய்கின்றார். திருமதி நாகலிங்கம் தங்கம்மா என்பவரது முகாமையில் பரிபாலனம் நடைபெறுகின்றது.

தகவல்; **நாகலிங்கம் தங்கம்மா**

உ

சிவமயம்

# வேள்ளை சூலாம்பத்தை வைரவர் ஆலயம்

150 வருடங்களுக்கு மேற்பட்ட வழிபாட்டு வரலாற்றை உடையது இந்த ஆலயம். தெல்லிப்பளை அஞ்சலகத்திற்கு வடக்கேயுள்ள மதவடியிலிருந்து மேற்கு நோக்கி 600 மீற்றர் தூரம் வரை செல்ல இந்த ஆலயம் பாதையோரத்தில் இருப்பதைக் காண லாம். மிகப் பழைய கட்டிடமே இன்றும் காணப்படுகின்றது. துர்க்காபுரம் கிராம சேவையாளர் பிரிவைச் சார்ந்தது இந்த இடம்.

மூலமூர்த்தி வயிரவர்-சூலம் உண்டு. பலியிடுதல் நடைபெற வேண்டுமென்று விரும்பிய ஒரு சிலருக்காக இந்த ஆலய வளவிலேயே கிழக்குப்புறமாக மேற்கு நோக்கி ஒரு சிறிய ஆலயம் வைக்கப்பட்டுள்ளது. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுகின்றது. அர்ச்சகராகச் சிவத்திரு வெங்கிடாசலம் பஞ்சலிங்கம் பணிபுரிகின்றார். முகாமை திரு ஐயாத்துரை அரியநாயகத்திற்குச் சொந்தமானது.

தகவல் : நாகர் ஆறுமுகம்

உ

சிவமயம்

# பளையில் வைரவர் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து பிரதானவீதியில் காங்கேயன்துறை நோக்கிச் செல்கையில் தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி, அஞ்சல் அலுவலகம் என்பவற் றைக் கடந்து வடக்கே செல்ல ஒரு மதவு வருகின்றது. அந்த மதவடியிலிருந்து மேற்குநோக்கிச் செல்லும் ஒழுங்கையில் ஒரு 500 மீற்றர்வரை செல்ல ஒழுங்கையின் தென்புறமாகச் சிதைந்த நிலையிலுள்ள இந்த ஆலயத்தைப் பார்க்கமுடியும்.

துர்க்காபுரம் கிராமசேவகர் பிரிவிலுள்ள இந்த ஆலயம் 90 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றினை உடையது. அந்தக்காலத்தில் இப்பகுதியில் செல்வாக்குடன் வாழ்ந்தவர் பேரம்பலம் பொன்னப்பா என்பவர். அவர் ஒரு வர்த்தகர், பளைப்பகு திக்குச் சென்று நெல் முதலியன கொண்டுவந்து விற்பவர். அந்தவகையில் தாம் அங்கு வழிபட்ட, தமது மனத்திற்குச் சாந்தியளித்த வைரவப்பெருமானையுங் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்கள். ஆலயம் இப்போதுள்ள இடத்திற்கு மேற்கே முதலில் தாபிக்கப்பட்டது. எப்பொழுது இந்த நிலத்திற்கு மாற்றப்பட்டதென்று தெரியவில்லை. 1963ஆம் ஆண்டு வரையில் இப்போதுள்ள இரண்டு மண்டபங்களையுடைய கட்டிடம் கட்டப்பட்டிருக்கலாம். கோவிலுக்கென இரண்டுபரப்பு நிலம் உண்டு. மூலஸ்தானத் தில் சூலம் உண்டு. நாகதம்பிரான் வெளியே காணப்படுகின்றது. நாய் வாகனம் ஒன்று அழிந்துகொண்டிருக்கின்றது. பொங்கல் பங்குனியில் நடந்தது. இப்போ கவ னிப்பார் யாருமில்லை. பூசைகள் நடைபெறுவதில்லை. மக்கள் கவனம் இந்த ஆலயப் புனரமைப்பிற் செலுத்தப்படவேண்டும், கிழக்குநோக்கியது இந்த ஆலயம்.

தகவல்: திருமதி யோகேஸ்வரி எமில்பேருட்

உ
சிவமயம்

# கேணியடி வைரவர் ஆலயம்

தெல்லிப்பழை கிழக்கு காளியம்பாள் ஆலயத்திலிருந்து தெற்குநோக்கிச் சென்று மேற்கே திரும்பித் தோதரை அம்பாளைச் சென்றடையச் சுமார் ஒரு நூறு மீற்றர் முன்னே தென்புறமாகவுள்ள பனைகள் சூழ்ந்த நிலத்திற் கேணியடி வைரவர் ஆலயத்தைக் கண்டு வழிபட முடியும். அந்த வளவின் ஒருபால் கேணியொன்றுண்டு. அந்தக் காரணத்தினாலேதான் இப்பெயர் வந்ததுபோலும். இந்த ஆலயத்தைப் பனையடி வைரவர் ஆலயம் என்று சொல்வாரும் உளர். பனந்தோப்பில் இருப்பது ஒரு காரணமாகலாம். மற்றொன்று ஆலயக் கர்ப்பக்கிருகத்தின் பின்னே ஒரு பெரிய ஆலமரம் உண்டு. அதன் நடுவே ஒரு பனை மரம் நிற்பதை அண்ணாந்து பார்த்துக் கண்டுகொள்ள முடியும். 10 அடி உயரத்தின்மேற்றான் பனை தெரிகின்றது. அதற்குக்கீழ் ஆலமரத்தைத்தான் காணமுடியும். இது தலவிருட்சம் என்கின்றனர். வணக்கத்துக்குரியதாகக் தெரிகின்றது. பெயர்க் காரணத்திற்கு இதனையும் சிந்திக்கலாம். சிங்கப்பூரில் உத்தியோகம் பார்த்து ஓய்வுபெற்ற சின்னக்குட்டியார் ஆறுமுகம் இந்த ஆலயத்தைக் கட்டுவித்தார். இப்போ ஆறுமுகம் குஞ்சிதபாதம் என்பவர் முகாமையில் நிர்வாகம் நடைபெறுகின்றது. மூன்று மண்டபங்களைக் கொண்ட ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் வயிரவப்பெருமானின் கருங்கல் விக்கிரகம் உண்டு. இரண்டாவது மண்டபத்தில் பிள்ளையார் அமர்ந்திருக்கின்றார். தினம் ஒருவேளைப் பூசையைச் சிவஸ்ரீ சுந்தரமூர்த்திஐயர் தியாகராசக்குருக்கள் கவனித்துவருகின்றார்.

தகவல் : **சிவஸ்ரீ சுந்தரமூர்த்திஐயர் தியாகராசக்குருக்கள்**

உ
சிவமயம்

# முள்ளார்த்தனை வீரபத்திரர் ஆலயம்

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய நிலையத்திற்கு வடமேற்குத் திசையில் அதன் எல்லையில், முள்ளார்த்தனை வீரபத்திரர் ஆலயம் உண்டு. தெல்லிப்பழை கட்டுவன் வீதியில் அரசினர் மாவட்ட வைத்திய நிலையத்தின் மேற்கெல்லையில் வடக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கை இந்த ஆலயத்தை அடையவைக்கின்றது.

மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ கந்தசாமிசர்மா மோகனசர்மாவால் தினமும் ஒரு காலப் பூசை செய்யப்படும். இந்த ஆலயத் தோற்றம் 120 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று சொல்லவேண்டியுளது. 1923இல் பிரம்மஸ்ரீ அரிகரக்குருக்கள் இரத்தினக் குருக்களைத் தலைமைக் குருவாகக் கொண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது நினைவிலுண்டு. அதன் பின்னே திருப்பணி வேலைகளோ கும்பாபிஷேகமோ நடைபெறவில்லை.

ஆதியிற் கல்லொன்றை வைத்து வழிபட்டார்கள் என்றும், பின்னர் சூலம் வைத்து வழிபடப்பட்டதென்றும், 1923இல் கருங்கல்லாலான வீரபத்திரர் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டதென்றும் அறிகின்றோம். நான்கு மண்டபங்களைக் கொண்டதாக இன்று காணப்படும் ஆலயத்தின் பரிவாரமூர்த்திகளாகப் பிள்ளையார், முருகன், நாகதம்பிரான் உண்டு. மணிக்கூட்டுக் கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்துடன் தர்மசாதனம் செய்யப்பட்ட நிலம் உண்டு. "தீங்கரும்பும் சர்க்கரையும் தேனமுதும் தீம்பாலும்" என்னும் முதலையுடைய ஊஞ்சற் பாஉண்டு.

தகவல் : **அப்பாக்குட்டி மயில்வாகனம்**

உ
சிவமயம்

# சித்தியம்புளியடி கட்டுப்பிட்டி நாகதம்பிரான்

மல்லாகம் சந்தியிலிருந்து கட்டுவன் நோக்கிச் செல்லும் வீதிவழி சுமார் 700 மீற்றர் வரை செல்ல இடது கைப்பக்கமாகச் செல்லும் ஒழுங்கையூடாக 200 மீற்றர் வரை செல்ல இந்த ஆலயத்தைக்கண்டு தரிசிக்க முடியும். இந்த ஆலயம் கந்தையா இராசதுரை என்பவரால் 1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது சித்தியம்புளியடி என்னும் குறிச்சியில் கட்டுப்பிட்டி என்னும் நிலத்தில் இந்த ஆலயம் உருவாகியுள்ளது. தெல்லிப்பளைக் கிராமசேவகர் பிரிவைச் சார்ந்தது.

குறிப்பிட்ட நிலத்தில் நின்ற வேப்பமரமொன்றில் ஏறி இராசதுரை என்பவர் குழை வெட்டியபின் இறங்குவதற்கு எத்தனித்துக் கீழே பார்த்தபோது பாம்பு ஒன்று படமெடுத்தாடியபடி நின்றதைக்கண்டார். ஒன்றுஞ் செய்யமுடியாத நிலையில் நாக தம்பிரானை நினைந்து வழிபட்டார். பாம்பு மறைந்து விட்டது. அந்த நிகழ்ச்சிதான் இந்த ஆலயத் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தது. வேம்பு தலவிருட்ஷமா கியது. ஒருகல் – தெய்வக் குறிப்பின்படி வைத்து வழிபடப்படுகின்றது. 1988இல் மூலஸ்தானம் மடாலயமாகக் கட்டுப்பட்டுள்ளது. அதனையடுத்து ஒரு மண்டபமும் நிறைவாகி வருகின்றது. திருப்பணி வேலைகள் தொடருகின்றன. தினமும் ஒருகாலப்பூசையும் செவ்வாய், வெள்ளியில் இருவேளைப்பூசையும் நடைபெறுகின்றது. கந்தையா இராசதுரை அவர்களே அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார்கள். கிழக்கு வாயிலையுடைய இந்த ஆலயத்தின் பரிவாரமூர்த்தமாக வயிரவர் உண்டு. அத்துடன் அண்ணமார் வழிபாடும் நடைபெறுகின்றது

தகவல்: கந்தையா இராசதுரை

சிவமயம்

# முடிமன்னர் இராஜ ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி சுமார் 600 மீற்றர் தூரம் வரை செல்ல ஒரு கிளைவீதி வடக்குநோக்கித் திரும்புவதைக் காணலாம். அந்தச் சந்திக்கு மேற்கே ஒரு நூறு மீற்றர் தூரம்வரை செல்ல வீதியின் வடக்குப் புறத் தில் பெரிய இலுப்பை மரமொன்றைப் பார்க்க முடியும். பக்கத்தே இரண்டு மரங் கள் ஒன்றனுள் ஒன்றாக வளர்ந்துள்ளன. அவற்றை அத்தி, இத்தி என்று சொல் கின்றனர். இந்த மரங்களிடையில் வழிபாடு நடைபெறுகின்றது. கல்லோ வேறு எதுவுமோ இல்லை. மரத்தை வணங்குகின்றார்கள். முடிவைத்த இராஜா போன்ற தோற்றத்தில் இறைவன் பலருக்கு அங்கே காட்சி கொடுத்த வகையில் அப்பெயரை மக்கள் சூட்டியுள்ளனர். சிவனைத்தான் அப்படிச் சொல்லுகின்றோம் என்றும் குறிப் பிட்டுள்ளார்கள். இந்தவகை வழிபாடு நூறு வருடங்களுக்கு மேற்பட்டதென்கின் றனர். 1980இல் ஒரு ஆலயம் அமைக்கத் தொடங்கி வேலை தொடருகின்றது. பிள்ளைநாயகம் இராமச்சந்திரன் என்பவருடைய முகாமையிலுள்ள ஆலயத்தின் சிறப்புக்காலப் பூசகராக நாகேந்திரம் நவரத்தினம் பணிபுரிகின்றார்.

தகவல் : திருமதி கார்த்திகேசு கண்மணி

உ
சிவமயம்

# சுளுவில் பெரிய தம்பிரான் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்குநோக்கிச் செல்லும்போது தென்புறம் வரும் அம்பனை வயலில் சுளுவில் என்னும் குளத்தருகே இந்த ஆலயம் உளது, அம்பனை வயலினூடாக அளவெட்டியை நோக்கிச் செல்லும் வீதியில் நின்று பார்க்க இந்த ஆலயம் கிழக்குப்புறமாக இருப்பது கண்ணிற்படும்.

மூன்று மண்டபங்களையுடையது இந்தக் கிழக்கு நோக்கிய ஆலயம். கர்ப்பக் கிருக மண்டபத்தில் வடக்குத்தெற்காக ஒரு பீடமுளது. அங்கே ஐந்து கல்லுகளை வைத்து வழிபடுகின்றனர். முறையே தெற்கிலிருந்து வடக்காக விநாயகர், அம்மை, பெரியதம்பிரான் (சிவன்), சுப்பிரமணியர், நாச்சிமார் என்பவர்களாக வழிபடுகின்றனர். இரண்டாவது மண்டபத்தில் இடது புறம் வீரபத்திரரும் வலது புறம் நாக தம்பிரானும் உளர். நடுவே வைரவர் நிற்கின்றூர்.

இந்த ஆலயத்தின் முன் கிழக்கே ஒரு பெரிய வேம்பு உண்டு. தன் நீண்ட ஆயுளைப் பறைசாற்றிக் கொண்டு அது நிற்கின்றது. அங்கே வைரவர் வழிபாடு நடைபெறுகின்றது. அதனைச் சூரிய மூர்த்தம் என்று சொல்கின்றனர். கோயில் முகாமை பொதுவானது. இந்த ஆலய மூர்த்திமீது "பூவுலகு வாழ்த்தவரு புதுமை நிறை தேவே" என்று தொடங்கும் ஐந்து புகழ்ப்பாடல்களைக் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை அவர்கள் பாடியுள்ளார்கள்.

தகவல்: எஸ். பழநி

உ
சிவமயம்

# சித்தியம்புளியடி அண்ணமார் ஆலயம்

மல்லாகம் கட்டுவன் பிரதான வீதியிலிருந்து சுடலைவைரவர் ஆலய வீதிவழியாக 200 மீற்றர் மேற்கு நோக்கிச் செல்ல இந்த ஆலயத்தை அடையலாம். அண்ண மாரைக் குறிப்பதாக மூலஸ்தானத்தில் ஒரு கல்லுண்டு. 120 ஆண்டுகட்கு முற்பட்ட இந்த இடத்திய வழிபாடு மற்றொரு இடத்திலிருந்து பிரிந்து வந்ததென்று கருத்து நிலவுகின்றது. வேல், வைரவரைக் குறிக்கும் சூலம், நாகதம்பிரான் என்பனவும் உள்ளே உண்டு. கோவிலின் உள்ளே ஒரு பாம்பு உண்டு. சில சந்தர்ப்பங்களிலே மட்டும் அது காட்சி கொடுக்கும். பால் பழம் வைத்துப் பூசிக்கின்றூர்கள். மல்லாகத்தைச் சேர்ந்த ஸ்ரீ சின்னத்துரை என்பவர் முன்பு அர்ச்சகராக இருந்தார். அப்போது தினமும் பூசை நடைபெற்றது. இப்போ நாகமுத்து இராசேஸ்வரன் அர்ச்சகராகப் பணிபுரிகின்றூர். செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுகின்றது. வைகாசிப் பொங்கல், மார்கழித்திருவாதிரைக் காலங்களில் சுவாமி வீதியுலா வருவதுண்டு. வேலர் கந்தசாமி என்பவரது முகாமையில் நிர்வாகம் நடைபெறுகின்றது. இரண்டு மண்டபங்களையுடைய இந்த ஆலயத்திற்கு இரண்டு பரப்பு நிலம் உண்டு. வீரபத்திரருக்குரிய பரிவாரக் கோயிற் திருப்பணி நடைபெறுகின்றது.

தகவல்: வேலர் கந்தசாமி

உ
சிவமயம்

# கோவிற்புலம் அண்ணமார் சிவன் ஆலயம்

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து தெற்கே சுமார் 1200 மீற்றர் தொலைவில் உள்ள கூட்டுறவு வைத்தியசாலையின் வடகீழ்த் திசையில், அதன் எல்லையில் இந்த ஆலயம் உண்டு. பிரதான வீதியில் நின்று கிழக்குநோக்கிப் பார்க்கையில் அடர்ந்து பரந்து வளர்ந்திருக்கும் விருட்சங்கள் காணப்படும். அங்கேதான், தெல்லிப்பளைக் கிராம சேவகர் பிரிவிலுள்ள கோவிற்புலம் என்னும் இடத்தில் இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது.

ஒரு நூற்றூண்டு காலத்திற்கு முற்பட்ட வரலாற்றினை உடையது இந்த ஆலயம். ஆலமரத்தின்கீழ் ஒரு சூலம் வைத்து ஆதியில் வழிபட்டனர். பின்னர் ஒரு ஓலைக் கொட்டகை போடப்பட்டது. பின்னர் சீமேந்தினல் கட்டடங்கள் கட்டப்பட்டன. சிவ வழிபாடு ஆரம்பமானது. கர்ப்பக்கிருகத்தில் சிவன் விக்கிரகம் உண்டு. பரிவார மூர்த்தங்களாக நாகதம்பிரான், வைரவர், காளி, வீரபத்திரர் என்போருக்குங் கோயில்கள் உண்டு. எழுந்தருளி மூர்த்தியொன்றும் உண்டு.

முன்பு தனிமுகாமையில் இருந்த இவ்வாலயம் 1975இல் பொதுச் சொத்தாக்கப் பட்டுப் பரிபாலன சபை தெரிவுசெய்யப்பட்டது. 1980இல் பலிகொடுக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது. 1979-02-10இல் கர்ப்பக்கிருக வேலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பரிபாலன சபையின் தலைவராயுள்ள குட்டியர் முருகையா அவர்களே அர்ச்சகராகவும் பணிபுரிகின்றூர்கள்.

வைகாசி மாதத்து விசாகத்திற்கு முதல் வெள்ளியிரவு சனி விடிய பொங்கல் விழா நடைபெறும். பொங்கல் தினத்தன்று பதினைன்கு தினங்கள் முன்பாகவரும் வெள்ளியிரவு அலங்காரத் திருவிழா நடைபெறும். தைப்பூச விழாவன்றும், சித்திரைச் சித்திரை விழாவன்றும் சுவாமி வீதியுலா வருவதுண்டு விஜயதசமிக்கு அண்ணமார் சிவன் புறப்பட்டு மல்லாகம் கட்டுவன் வீதிவழி சென்று சித்தியம்புளியடி சுடலை வைரவர் ஆலயத்தில் வன்னிவாழை வெட்டும் வழக்கம் இப்போதும் உண்டு.

இரட்டைக் குதிரை வாகனம், மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் இங்கு உண்டு.

தகவல் : குட்டியர் முருகையா

உ
சிமமயம்

# கோவங்கட்டுவளை அண்ணமார் ஆலயம்

தெல்லிப்பளை கட்டுவன் வீதியில், அரசினர் மாவட்ட வைத்தியசாலையைக் கடந்து சுமார் 400 மீற்றர் தூரம் வரை கிழக்கே சென்று வீதியின் தென்புறம் இருக்கும் கிறிஸ்தவ இடுகாட்டின் கிழக்கெல்லை வழியாகத் தெற்கு நோக்கி 200 மீற்றர் வரை சென்று மேற்கே திரும்பிப்பார்க்க கோவங்கட்டுவளை அண்ணமார் ஆலயத்தைத் தரிசிக்கலாம். சூடுவிழுந்தான் அண்ணமார் ஆலயம் என்றும் இதனைச் சொல்வர்.

ஆரம்பகாலத்திற் பிராய் மரத்தடியில் ஒரு கல்லை வைத்து வழிபட்டனர். இப்போது அதே கல்லை வைத்தே வழிபாடு தொடருகின்றது. வழிபாடு தொடங்கிய காலம் ஒரு 100 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகலாம். முதலிற் கட்டிடம் எப்போது அமைக்கப்பட்டதென்று தெரியவில்லை. முன்பிருந்த பழைய சுண்ணாம்புக் கட்டிடம் 1955 வரையில் இடிக்கப்பட்டுப் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை நடைபெறுகின்றது. தை ரேவதி நட்சத்திரத்தில் திருவிழா நடைபெறுவதுண்டு. தைப்பூசம், திருவாதிரை, விஜயதசமி விசாகம், ஐப்பசிக் கடைசி வெள்ளி ஆகிய தினங்களில் விஷேட வழிபாடு உண்டு.

கோயில் நிர்வாகத்தைக் கவனிக்கவென ஒரு பரிபாலனசபை தெரிவாகியுள்ளது. கதிரவேலு மாணிக்கம் என்பவர் தலைவராகப் பணிபுரிகின்றார். கோயில் அர்ச்சகராக இராமன் செல்லர் என்பவர் பணிபுரிகின்றார். தெல்லிப்பளைக் கிராமசேவையாளர் பிரிவில் உள்ள இந்த ஆலயம் நான்கு மண்டபங்களை உடையது. மூலமூர்த்தி அண்ணமார் இப்போ விக்கிரகமாக உண்டு. மாற்றம் பெற்றகாலம் தெரியாது. பிள்ளையார், முருகனுக்காக வேல், காளிக்காகச் சூலம், வயிரவர் சூலம் என்னும் மூர்த்தங்களும் உண்டு.

தகவல்: **இராமன் செல்லர்**

**சுபம்.**



## நீத்தார் நினைவாக....

### வளர்ச்சிப் படிநிலை

- நடுகல் வழிபாடு
- பள்ளிப்படை - சமாதி அமைத்தல்
- சிலை நிறுவுதல்
- சுமைதாங்கியும் கிணறும் அமைத்தல்
- குருபூசை நிகழ்த்தல்
- பஸ்தரிப்பு நிலையம், பாடசாலை, அறிவகம், பொதுப்பணி மன்றம் நிறுவுதல்

## இலக்கிய மரபிலே....

- புலம்பல் கையறுநிலைப் பாடல்கள்
- வாழ்க்கை வரலாறு
- கல்வெட்டும் சரமகவியும்
- நினைவு மலரும் நினைவு வெளியீடும்
- நினைவு விழாக்கள்
- சிரார்த்த தினங்கள் சிந்தனை மேடைகளாதல்

"நீத்தார் நினைவில் ஓர் இலக்கிய மரபு"

— கலாநிதி நா. சுப்பிரமணியன் —

மஹாத்மா அச்சகம், ஏழாலை.